ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

15 பங்குனி 2020

மாதாந்த மின்னிதழ்

## அன்பே சிவம்

உலகெங்கும் உலுக்கி வரும் கொரோனா வைரஸ் நோயிலிருந்து மானிட அவலம் நீங்கி எந்தவித உயிர்ச் சேதமும் இன்றி ஆரோக்கியமாக வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்



# சிவ ஒளி

மாதாந்த மின்னிதழ்

15 பங்குனி 2020

ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 3

சிவஒளி ஆலோசனை தென்கயிலை ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

**தலைமை ஆசிரியர்**

சமூகசேவையாளர்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

**உதவி ஆசிரியர்**

நாட்டியக் கலைமணி
திருமதி.பவானி குகப்பிரியா (கொழும்பு)

**ஆசிரியர் குழு:**

- கலாநிதி திரு.பாலசுகுமார் (இலண்டன்)
- கலாநிதி
  திரு.பால. சிவகடாட்சம் (கனடா)
- கலாநிதி. பண்டிதர்
  திரு. திருநாவுக்கரசு (யாழ்ப்பாணம்)
- தேசபாரதி தீவகம்
  வே.இராஜலிங்கம் கவிஞர் (கனடா)
- முதுதத்துவமாணி
  திருமதி.தாரணி இராஜ்குமார்
- திருமதி.சிவகுமாரி ஜெயசிம்மன்
  நொர்லாந்து

**வடிவமைப்பு**

மோகன சாந்தி



தென்கயிலை ஆதீனம்
இல–36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

**குரு முதல்வர்:**

தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

**இளைய பட்டம்:**

திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

**தொடர்புகளுக்கு:**

தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com


# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி

**2004** ல் ஆழிப்பேரலை உலகையே புரட்டிப் போட்டது. இது நடந்து பதினாறு வருடங்கள் சென்றாலும் அதன் தாக்கத்திலிருந்து மானிட அவலம் மீளத் திரும்பாத நிலையில் மறுபடியும் இயற்கை அனர்த்தத்திற்கு மேலான, மானிடத்திற்கு சவால் விடக் கூடிய கொரோனா வைரஸ் உலகையே அதிர வைத்துள்ளது. ஒவ்வொரு நாடுகளிலும் தினமும் சாவு கதவைத்தட்டும் அவலநிலை. வல்லரசு நாடுகளும் வறிய நாடுகளும் செய்வதறியாது திணறிப்போய் நிற்கின்றன. விஞ்ஞானம் கூட வெருண்டு போய் நிற்கிறது. அந்தளவுக்கு கொரோனா வைரஸின் கொடூரம் தலைவிரித்தாடுகிறது. நாளுக்கு நாள் சாவின் எண்ணிக்கைகள் உயர்ந்து கொண்டே செல்கிறது.

இந்த மானிட அவலம் ஏன் எதற்கு என்ற கேள்வி மனிதனாகப் பிறந்த ஒவ்வோர் மனங்களிலும் துளிர்க்க வேண்டியதே. இயற்கையை மதிக்காது மனிதன் தனது செருக்குடன் அறிவைக் கொண்டு நடாத்தும் பரிசோதனைகளும் கண்டு பிடிப்புகளும் இயற்கையையே சினம் கொள்ள வைக்கின்றது. மறு புறத்தில் உண்மையும் நேர்மையும் ஒளிந்து கொண்டு இருக்கிறது. மனித நேயம் மண்டியிட்டு நிற்கிறது. கருணையுள்ளங்கள் கலங்கிய நிலையில்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் சாவுகள் .... இந்த சந்தர்ப்பத்தை அதாவது அவலத்தை சாதமாக்கிக் கொண்டு பணம் சம்பாதிக்கும் நிலையை பார்க்கும் போது மனம் வருந்த வேண்டியுள்ளது. இலங்கையில் தனியார் ஆய்வு கூடங்கள் குறுக்கு வழியில் பணம் பறிக்க முண்டியடிக்கத் தொடங்கிய நிலையில் இலங்கை சுகாதார அமைச்சு அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. சாதாரண காய்ச்சல் தலையிடியை வைத்து பணம் பறிக்கும் நிலையை தடுக்கும் படலத்தில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்துவது கருணையின் எல்லையே. அது போல் கொழும்பில் மக்கள் அன்றாடம் வாங்கும் உணவுப் பொருட்களை விலை கூட்டி விற்று இலாபம் தேட முற்பட்ட வர்த்தகர்கள் சிலர் பொலி

● தென்கயிலை சிவா



சாரினால் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் நடந்தே றித்தான் இருக்கிறது. அது போல் ஐரோப்பாவில் பல கடைகளில் மக்கள் உணவுப் பொருட்களுக்காக முண்டி யடித்த வேளை திடீரென நாளுக்கு நாள் விலையேற்றம் செய்யப்பட்ட வேதனையான சம்பவங்களும் அரங்கே றித்தான் இருக்கிறது.

யாழ் நகரில் ஐஸ்கிறீம் கடையொன்றில் வெறிநாட்டு வெள்ளை இனத்தவர் ஒருவரைக் கண்ட, கொரோனா வைரஸ்விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த, மனிதநேயமிக்க வைத்தியர் பரா நந்தகு மாரும் அவரது உதவியாளரும் குறித்த வெளிநாட்டவர் உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவரா என்று அறிய முற்பட்டபோது, ஐஸ்கிறீம் கடை பணியாளர்கள் இருவரால் தாக்கப்பட்ட சம்பவம் இன்னும் ஒரு வேத னைச் சம்பவம்.

மானிடம் எங்கே செல்கிறது ... எதை நோக்கிச் செல்கி றது... எதைச் சாதிக்கப் போகிறது.. கேள்விகள் மட்டுமே தொக்கி நிற்கிறது...

ஒருபக்கம் உலகத்தில் அமைதியும், சமாதானமும் நில வி, உயிர் அச்சம் இன்றி, நோய் நொடியின்றி மானு டம் தழைத்தோங்க வேண்டுமென்னும் ஆதங்கத்தோடு வழிபாடுகளும், மனித நேயச் செயற்பாடுகளும், கருணையுள்ளம் கொண்டோராலும் மானுட தர்மம் கொண்டோராலும், நடைபெற்று வருவது... மனதுக்கு மிகப்பெரிய நின்மதியைக் கொடுக்கிறது. அதே வேளை மானிட அவலத்தை சாதகமாக்கிக்கொண்டு பல வர்த்தகப் பெருமக்கள் நீதியற்ற முறையில் விலை களை ஏற்றி பணம் சம்பாதித்தக்கொண்ட சம்பவங்கள் மனதை நெருடுகின்றன.

உண்மையும், நேர்மையும், தர்மமும், கருணையும் கொண்ட மானிட சமூகமாக, இயற்கையை நேசிக்கும் சமூகமாக, மனிதனை மனிதன் நேசிக்கும் சமூகமாக, மனித குலம் நாளை மாற வேண்டும் என்னும் உயர்ந்த சிறந்த எண்ணங்களோடு ஒளியில் ஒளியாகி, உயிரில் உயிராகி மானிடத்தை நேசிப்போம்.... இயற்கையுடன் இணைந்திருப்போம்... அன்பே சிவமாகி.. அனைவ ரையும் அரவணைப்போம்.



# அன்பே சிவமாய்



தென்கயிலை சிவா

**தெ**ன்கயிலை ஆதீனத்தின் சிவன் மலை சிவப் பரம்பொருள் அருளாய் மிளிர்கின்றது. உலகெங்கும் பரந்து வாழும் சிவனடியார்களின் பேருதவியுடன் சிவன் மலை... லிங்க மலையாகக் காட்சியளிக்கின்றது. கடந்த சிவன் ராத்திரி அன்று பதினெட்டு லிங்கங்கள் பரவலாக உயிர்ச்சக்தி ஊட்டப்பட்டு அமர்த்தப்பட்டுள்ளது. லலிதாம்பாள் உடனுறை பேரானந்தேச்சரர் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் நூற்றி எட்டு 108 லிங்கங்கள் அமர்த்தும் திட்டத்தில் உலகெங்கும் வாழுகின்ற சிவனடியார்கள் இணைந்து தமது குடும்ப சார்பில் ஒவ்வொரு லிங்கத்திற்கான பொறுப்பையும் ஏற்று செயலாற்றி வருகின்றனர்.



தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு. தவத்திரு. ஆகத்தியர் அடிகளாரின் சிறந்த வழிகாட்டலில், இளையபட்டம் திருமூலர்



பராமரிக்கப்பட்டு வரும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. கனடா, இலண்டன், இலங்கை, பிரான்ஸ், யேர்மனி போன்ற நாடுகளில் வாழும் சிவனடியார்களின் உதவியுடன் அமர்த்தப்பட்ட லிங்கங்களைத் தவிர மேலதிகமாக இன்னும் 90 லிங்கங்கள் உயிர்ச்சக்கி ஊட்டப்பட்டு அமர்த் தப்படவுள்ளன. தங்கள் குடும்பங்களின் பெய ரில் லிங்கங்களை பொறுப்பேற்க விரும்பும் சிவனடியார்கள் எம்முடன் தொடர்பு கொண்டு உரிய தகவல்களைப் பெறுவதற்கு அன்பே சிவமாய் அழைக்கின்றோம்.

தம்பிரான் அடிகளார் செயற்பாட்டில் மேற்படி லிங்க அமர்த்தல் நிகழ்வுகள் இறை ஆசியுடன் நடைபெற்று வரு கின்றன. உயிர்ச்சக்கி ஊட்டப்பட்டு அமர்த்தப்பட்ட லிங்கங் களுக்கு யாகம் செய்து தமிழில் பூசை வழிபாடும் நடைபெற் றன. அத்துடன் ஒவ்வொரு லிங்கங்களுக்கும் பொறுப்பேற்ற குடும்பத்தின் உதவியுடன், தொடர்ந்து பூசைகளும், குடமு முக்கு ஆராதனைகளும் செய்து வைக்கப்படும்.

ஒவ்வொரு லிங்கங்களுக்கும் பொறுப்பேற்ற குடும்பத்தின ரின் விருப்பத்துடன் கூடிய தெரிவுடன் பெயர்கள் சூட்டப் பட்டு அவர்களது உபயப் பெயர்களும் பொறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்றன. வாழ்நாள் வரைக்கும் பொறுப் பேற்ற குடும்பத்தின் பெயரிலேயே ஒவ்வொரு லிங்கங்களும்







# சிவபூமி அருங்காட்சியகம்

**தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்றிற்கும், பண்பாட்டிற்கும் புதிய முகவரியை தேடித்தந்திருக்கு சிவபூமி அருங்காட்சியகம்.**




பேராசிரியர்
ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


**யா**ழ்ப்பண நுழைவாயிலான நாவற்குழியில் 25.01.2020 அன்று திறந்து வைக்கப்படும்

சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகத்தின் ஆரம்ப நிகழ்வை ஈழத்; தமிழர் வரலாற்றில் நிரந்திரமாக இடம் பெறப் போகும் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகப் பார்க்கிறேன்.

இவ்வருங்; காட்ச்சிகத்தின் மூலம் எம் சந்ததியினரால் வளர்க்கப்பட்டு எம் மோடு வாழ்ந்து வரும் பாரம்பரிய மரபுரிமைச் சொத்துக்களைச்

சிறிதும் பிசகாமல் அடுத்து வரும் சந்ததியினருக்கு கையழிப்பதற்கு வழியேற்படுத்தப்பட்டிருக்கின்றது. மூன்று தளங்களில் அமைக்கப்பட்ட இவ்வரும் பொருள் காட்சியகத்தில் வடஇலங்கை மக்களின் பூர்வீக வரலாற்று அடையாளங்கள், மரபுரிமைச்

சின்னங்கள், பயன்பாட்டிலிருந்து மறைந்து போகும் பாரம்பரிய பாவனைப் பொருட்கள்,தமிழ்மக்களின் கடந்தகால வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் புகைப்படங்கள், ஓவியங்கள் என்பன காட்ச்சிப்படுத்தப்பட்டு உள்ளன.

இவற்றைப் பார்வையிடுவோருக்கு எமது சந்ததியினர் எங்கிருந்து வந்தார்கள், எங்கே போகின்றார்கள், எங்கே போகவேண்டும் போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடைகாண வழிபிறந்துள்ளது. இந்த அருங்காட்சியகம் தமிழ் மக்களின் விலைமதிக்கமுடியாத செரத்து மட்டுமல்ல அதை தூரநோக்குடன் கடின உழைப்பால் உருவாக்கித் தந்த கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சொத்தாகும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள்பாதுகாக்கப்படுவதற்கு ஒரு முழுமையான அருங்காட்சியகம் வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவாகும். 1971 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் கந்தரோடையில் மண்ணுக்குள்

புதையுண்டிருந்த பல நூற்றுக்கணக்கான தொல்பொருட்ச் சின்னங்கள் வெளிவந்தன. அவற்றைப் பார்வையிட்ட அன்றைய அரசஅதிபர் போல் பீரிஸ் அநுராதபுரத்திற்கு அடுத்த புராதன நகரம் கந்தரோடை எனக்குறிப்பிட்டு இம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க தமிழர் ஒருவரைத் தொல்லியல் ஆணையாளராக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

1940 ஆம் ஆண்டுக்குரிய பிருத்தானியர் கால ஆவணத்தில் சாவகச்சேரி பழைய நீதிமன்றத்தின் கீழ் புதையுண்டிருந்த புராதன ஆலயத்தின் அழிபாடுகள் பாதுக்கப்படவேண்டும் என்னும் ஆதங்கத்தை வெளிப்டுத்திக் காட்டியது. இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை மைய மாகக் கொண்டெழுந்த பத்திரிகைகள் தமிழர்களின் மரபுரிமை கள் கவனிப்பாரின்றி அழிவடைந்து வருகின்றன. பணத்திற் காக பிற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்ற குற்றச் சாட்டை முன்வைத்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் முன்வரவேண்டும் என அற கூவல் விடுத்து வந்தன்.

இந்நிலையில் 1970 களில் பேராசிரியர் கா.இந்திரபா லா, வி.சிவசாமி, திரு.ஆ.சிவனேசச்செல்வன் ஆகியோ ரின் முயற்சியால் யாழ்ப்பாணத் தொல்லியற்கழகம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பில் ஆர்வத்து டன் இணைந்கொண்ட ஆசிரியர்களான பொன்னம்பலம், திருவள்ளுவர்,நிலஅளவையாளர் சேயோன், பூநகரி உதவி



**இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ளஅருங்காட்சி யகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். தற்போது தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட் டையும் அறிந்து கொள்வதற்கு புதிய வழி திறக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு பரப்பில் மூன்று தளங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தின் கட்டிட அமைப்பு, காட்சிப்படுத்தலில் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்குமுறை, காட்சிப்படுததப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னங்கள், சிலைகள், சிற்பங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், அவை பற்றிய வரலாற்றுக் குறிப்பிக்கள் என்பன அருங்காட்சியகத்தைப் பார்க்க வருபவர்களுக்கு இதுவரை தெரிந்திருக் காத தமிழர் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகளை சொல்லப்போனின்றன.**

அரசாங்க அதிபர் கிருஷ்ணமூர்த்தி, கலைஞானி, குரும்பசி ட்டி கனகரட்ணம் போன்ற பெரியவர்கள் தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிவதிலும், பாதுகாப் பதிலும் ஆர்வத்துடன் பணியாற்றினர் அவர்களின் கண் டுபிடிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு பல்கலைக்கழக மட்டத்திலும் சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

ஆயினும்; மரபுரிமைச் சின்னங்களைச் சேகரித்த பலர் இன்று அமரத்துவம் அடைந்துவிட்ட நிலையில் அம்மரபுரி மைச் சின்னங்களுக்கு என்ன நடந்ததென்பதை யாருமே அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. 2009க்குப் பின்னர் முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு வடஇலங்கை மரபுரிமைச் சின்னங்கள் தென்னிலங்கைக்கும், பிற நாடுக ளுக்கும் கடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 20102011 காலப்பகுதியில் தென்னிலங்கை வர்த்தகர்கள் தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்து வீடுவீடாகச் சென்று குறைந்த விலையில் மரபுரிமைச் சின்னங்களைக் கொள் வனவு செய்த சம்பவங்களும் உண்டு. அவ்வாறு கொள் வனவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் இன்றும் அநுராதபுரம், பொலநறுவை, கொழும், கண்டி போன்ற இடங்களில் உள்ள கடைகளில் வெளிநாட்டவருக்கு உரிய விற்பனைப் பொருட்களாக உள்ளன.

கடந்த வாரத்தில் கூட வடஇங்கையில் இருந்து அமெ ரிக்காவுக்கு கடத்தப்பட இருந்த இரு கோடிரூபா பெறு மதியான மரபுரிமைச் சின்னங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. இவ்வாறு எமது இனத்தின் மூலவேர், இன, மத அடையாளங்கள், பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்கள் எம்கண் முன்னேயே



கடத்தப்பட்டும், அழிவடைந்தும் வருவதை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கெல்லாம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விழிப்புணர்வும், அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிப்பதற்கான அருங்காட்சியகங்கள் இல்லாதிருப்பதுமே முக்கிய காரணங்களாகும்.

இவற்றைச் செய்து கொடுக்க அரச அமைப்புக்களோ, பொது நிறுவனங்களோ முன்வரவில்லை. தென்னிலங்கையைப் போல் இங்குள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இவற்றைச் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருவதாகவும் தெரியவில்லை. இதனால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் மத்தியில் ஒரு கனவாகவே இருந்து வந்துள்ளது. ஆயினும் தற்போது அந்தக் கனவுக்கு சிவன் அருள் கிடைத்துவிட்டது. அது தனி மனிதனாக இருந்து அல்லும்பகலும் உழைத்த கலாநிதிஆறுமுகம் திருமுருகன் வடிவத்தில் கைகூடியுள்ளது. அதுவே நாவற்குழில் தலைநிமிந்து நிற்கும் சிவபூமி அரும்பொருள் காட்சியகமாகும்.

அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்பது கலாநிதி திருமுருகன் அவர்களின் திடீர் கனவு அல்ல. அவர் துர்க்கையம்மன் ஆலயத் தலைவராக பதவியேற்ற காலத்தில் இருந்து எமது மரபுரிமைச் சின்னங்களைச் சிறுகச் சிறுக சேமித்து வந்ததை நான் அறிவேன். அவை வலிகாமத்தில் மூன்று இடங்களில் பாதுகாக்கப்பட்டும் வந்தன. ஆயினும் அதற்கொரு அருங்காட்சியகம் தோன்றும் என நான் கனவு காணவில்லை. அதனால் இவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்து அம்மரபுரிமைச் சின்னங்களை எமது தொல்லியல் இறுதிவருட மாணவியூடாக ஆவணப்படுத்தி வைத்துள்ளோம். அது தனியொரு நூலாகவும் விரைவில் வெளிவரவுள்ளது. அப்போது சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தோன்றிய வரலாற்றுப் பின்னணியும் தெரியவரும்.

இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ளஅருங்காட்சியகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். தற்போது தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு புதிய வழி திறக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு பரப்பில் மூன்று தளங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தின் கட்டிட அமைப்பு, காட்சிப்படுத்தலில் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்குமுறை, காட்சிப்படுததப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னங்கள், சிலைகள், சிற்பங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், அவை பற்றிய வரலாற்றுக் குறிப்பிக்கள் என்பன அருங்காட்சியகத்தைப் பார்க்க வருபவர்களுக்கு இதுவரை தெரிந்திருக்காத தமிழர் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகளை சொல்லப்போனின்றன. அவற்றுள் திறந்த வெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மன்னர்களின் சிலைகள் பலரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளன. இதுவரை எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்களுக்கே சிலைவைக்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் நல்லுரைத் தலைநகராகக் கொண்டு 350 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்த 21 தமிழ் மன்னர்களுக்குச் சிலைகள் வைக்கப்படவில்லை. அக்குறைபாட்டைப் போக்கும் வகையில் முதன் முறையாக சிவபூமி திறந்தவெளி அருங்காட்சியகத்தில் 21 மன்னர்களுக்கும் கடவுளருக்கு அடுத்த நிலையில் பீடங்கள் அமைத்து அவற்றின் மேல் மன்னர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டு அவற்றின் கீழ் ஆட்சியாண்டுகள் பொறிக்கப்பட்டுள்ளமை வரலாற்று ஆர்வலகர்களுக்கு மனமகிழவை அளிப்பதாக உள்ளது.

கடந்த இருவாரங்களாக முகநூல்களில் பகிரப்பட்ட செய்திகளில் சிவபூமி அருள்காட்சியகம் பற்றிய செய்திகளே அதிக அளவில் ஆக்கிரமிப்புச் செய்தியாகக் காணப்படுகின்றது. இது தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியதன் பிரதிபலிப்பாகும். இதன் சாதனைக்கும் நன்றிக்கும்



உரியர் அரசியல் கலப்பற்ற சொல்லின் செல்வர் ஆர்.திருமுருகன் அவர்கள். துடிப்புள்ள இளைஞராக ஆன்மீகப் பணியில் ஈடுபட்ட அவர் படிப்படியாக சமூகப் பணியில் அகலக் கால்பதித்து சாதனை படைத்துவரும் ஒருவர். பலர் சிந்திக்க முன்னரே செயலில் காட்டி பிறரைப் புதிதாகச் சிந்திந்திக்கத் தூண்டியவர். இதற்கு தனிமனிதனாக இருந்து கிழக்கிலங்கை வரை இன்று வியாபித்துள்ள அனாதைச் சிறுவர்களுக்கான கல்விக்கூடம், விழிப்புணர்வற்றவர்களுக்கான காப்பகம், வயோதிபர் மடம், நாய்களுக்கான காப்பகம் முதலான அவரது பணிகள் கட்டியம் கூறிநிற்கின்றன. தூரநோக்குடன் நாவற்குழியில் அவர் உருவாக்கிய திருவாசக அரண்மனை இலங்கைவரும் ஆன்மீகவாதிகளையும், சுற்றுலாப் பயணிகளையும் யாழ்ப்பாணத்தை திரும்பிபார்க்கவைத்தது. இன்று அதற்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சிவபூமிஅரும்பொருள் காட்சிகம் தமிழ்ர் பண்பாட்டை மேலும் தலைநிமிரச் செய்துள்ளது. இன்று யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் நாவற்குழி என அடையாளப்படுத்தப்படும் பெயர் விரைவில் யாழ்ப்பாண இராசதானியின் நுழைவாயில் என அழைப்படுத்துவதற்கு இவ்வருங்காட்சியம் வழிவகுக்கலாம்..




# சிவஒளி மலர்கவே

சிவஒளி கண்டேன் சிவன்ஒளி கண்டேன்
நவஒளி அண்டத்து நவகரம் கண்டேன்
தவஒளி பிறந்த தத்துவம் கண்டேன்
பவஒளி மலர்ந்து பரவுதல் கண்டேன்
புவிஒளி சிறந்து புரிதலும் கண்டேன்
குவிஒளி அதனிற் குவலயம் கண்டேன்
கவிஒளி உலவக் கடவுளைக் கண்டேன்
ஒவமொடு உலகியல் உவத்தலும் கண்டேன்
உவலெனும் வாழ்க்கை அவிழகம் கண்டேன்
அவிழ்ந்தமெய்ஞ்; ஞானமாய் அற்புதம் கண்டேன்
சிவஒளிச் செவ்விதழ் சிறந்திட மலர்கவே.
தவிடுபொய் அகலச் சிவன்புரம் கண்டனே!

தவ்விய வாழ்த்துக்களுடன்
மதுபாலன் (ஜேர்மனி)



# இலங்கையில் சித்த மருத்துவம்

தமிழ் மருத்துவமானது தமிழர்களின்
முழுமுதற்கடவுளான சிவபெருமனினாலேயே
அருளப்பட்டதாக அதன் வரலாறு கூறுகின்றது.

தமிழ்மருத்துவத்தை சிவபெருமான்
உமாதேவியாருக்கு அருளி

அவர் தமிழ்க்கடவுளாகிய முருகனுக்கு
தமிழ் மருத்துவத்தை அருளினார் ,

தமிழ் கடவுளாகிய முருகனே அகத்தியருக்கு
நான்கு வேதங்களையும்

உபதேசித்து ஆயுளை வளர்க்கும் வேதமாக
தமிழ் மருத்துவத்தை வழங்கினார்.
இதனை காகபுசுண்டர் பெருநூல்
காவியம் மற்றும் அகத்தியர் பரிபாசை என்னும்
நூல்கள் ஆதாரமாகக் கொண்டுள்ளன.
அகத்தியர்பரிபாசையில் கீழ்வரும்
பாடல் மூலம் இது தெளிவாகின்றது.

'மந்தர வடிவுள்ளானைத் தொழுது
கொண்டேந்தன்நெஞ்சில்

அந்தரமான சோதி அருமறை வேதம் நாலும்

சொந்த மென்றாண்டு கொண்ட
தோகையைப் பாகம் வைத்த

எந்தனுக்குபதேசங்கள் இயம்பினாரீசன்றானே.'

**அகத்தியர்பரிபாசை**

இவ்வாறே தமிழ் மருத்துவம் அகத்தியர் திருமூலர் முதலான பதினெண் சித்தர்களுக்கும் உபதேசிக்கப்பட்டதாகவும், அவர்களே பூமியில் தமிழ் மருத்துவத்தை பரப்பியும் உள்ளனர்.

இதேவேளை உமாதேவியாரிடம் இருந்து நந்திதேவர் மருத்துவத்தைப் பெற்றுஅதனை அகத்தியர் திருமூலர் முதலானபதினெண்சித்தர்களுக்குவழங்கியதாகவும் ஒருவரலாறு கூறுகின்றது.

இங்கனம் பூமியில் பதினெண் சித்தர்களின் கோட்பாடுகளின் அடிப்படையில் கைக் கொள்ளப்படும் தமிழ்மருத்துவக் கலையானது ஆதியில் ஆயுளை வளர்க்கும் 'ஆயுள்வேத மருத்துவம்' எனக் குறிப்பிடப் பட்டிருந்தாலும்


பிற்காலத்தில் அதாவது கி.மு பதின் முன்றாம் பதின்னாங்காம்; நூற்றாண்டுகளில் பதினெண் சித்தர்களின் காலத்துக்கு பிற்பாடு சித்தர்களை மையப்படுத்தியதாக தமிழ் மருத்துவம் சித்த மருத்துவமாக வளர்ச்சியடைந்தது. இங்கு சிவசம்பிரதாயத்தையும்; தமிழையும் அடிப்படையாகக் கொண்டு சித்த மருத்துவமும் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

பதினெண் சித்தர்களின் காலமே சித்த மருத்துவத்தின் பொற்காலமாகவும்கருதப்படுகின்றது.இதுகி.மு 13ஆம் 14ஆம் நூற்றாண்டு காலப்




**சித்தமருத்துவர்**
**தியாகராஜா சுதர்மன்**
**BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition**
**மானிப்பாய்.**

பகுதியை கொண்டது. அக்காலத்தில் வாழ்ந்த பதினெண்சித்தர்களைபற்றிய'தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்' எனும் நூலில் உள்ளபாடல் சித்தர்களின் பெயர்களைக் கூறுகின்றது.



''பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்
பண்பான அகத்தீசர் சட்டை நாதர்
போர்த்திடவே பதஞ்சலியும்
ஊனர் கண்ணர்
கோரக்கர் கமல முனி சண்டிகேசர்
கூர்த்திடவே இடைக்காடர்
சிவாயச் சித்தர்
கொங்கணவர் தந்தை போகநாதர்
காத்திடவே மச்ச முனிபிண்ணாக்கீசர்
காலாங்கி சுந்தரரும் காப்புத்தானே.''

இவ்வாறு தோன்றிய சித்த மருத்துவம் குமரிக் கண்டத்துள் இருந்த இலங்கைக்கு அகத்தியரின் வருகையுடன் மேலும் சிறப்புறத் தொடங்கியது. சிவபெருமானின் திருக்கல்யாணத்தினால் வடதுருவம் தாழ அதனை சமன் செய்வதற்காக அகத்தியர் பெருமான் தென் பொதிகையான இலங்கைக்கு வந்தடைந்தார்.

சிவனொளிபாத மலையில் சிவனின் பாதச்சுவடுகளில் இருந்து உருவாகும் மகாவலிகங்கை இதட்சிண கைலாசம் என்று போற்றப்படும் திரிகோணமலையில் கடலுடன் கலக்கும் இடமே சிவனை தரிசிக்க சிறந்த இடமென்று மூதூரில் உள்ள திருக்கரைசையம்பதியை அடைந்து அங்கிருந்து கொண்டே சிவனின் திருமணக் காட்சியைக் கண்ணாரக் கண்டிருக்கின்றார்.

திருக்கரைசையம்பதியில் தங்கியிருந்த அகத்தியர் அங்கு அகத்தியர் தாபனத்தை நிறுவி சிவலிங்க வழிபாட்டினை மேற்கொண்டு சித்த மருத்துவத்தை செய்ததுடன் ,சித்த மருத்துவத்தைக் கற்றும் கொடுத்தார்.

தொடரும்...



## சைவ மகா சபை சகோதர அமைப்புக்களின்

# கீரிமலை சிவராத்திரி 2020 பிரகடனம்

**1.** கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் மீள் உதயம் பற்றிய அறிவிப்பு.

**2.** இலங்கையின் நல்லை , தென் கயிலை மெய்கண்டார் ஆதீனங்களையும் சைவத் துறவியரையும் உள்ளடக்கிய உயர் சைவ பீடம் அமைக்க சைவ மறுமலர்ச்சி செயலணி உருவாக்கம்.

**3.** தமிழர் பிரதேச கிராமங்களில் அடிப்படை மருத்துவ கல்வி வசதிகளுக்காக சமச்சீரான ஆளணி வளப் பங்கிட்டிற்கு அரசை வலியுறுத்துதல்.

**4.** கீரிமலை சிவபுண்ணிய பிரதேசத்தில் விடுவிக்கப்படாமலுள்ள சடையம்மா மடம் உள்ளிட்ட சைவ ஆலயங்களில் வழிபாட்டுக்கு அனுமதி வழங்கும் கோரிக்கை.

**5.** அறநெறி ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு மற்றும் அறநெறி ஆசிரியர் கலாசாலையை யாழ் நாவலர் கலாச்சார மண்டப வளாகத்தில் ஏற்படுத்தும் வேண்டுகோள்.

**6.** யாழ் . பல்கலையில் சைவப் பிரசாரகர் பயிற்சி நெறியை பட்டய [டிப்புளமோ] கற்கை நெறியாக இந்து கற்கைகள் பீடத்தில் கொண்டு வரும் முன் முயற்சிகள்.

**7.** யாழ், வன்னி, கிழக்கு மலையக கிராமிய பூசகர்களுக்கு பயிற்சி அளிக்கும் கீரிமலை ஆதி சைவக் குருகுலத்திற்கு அரச ஆதரவு மானியம் கோரல்.

**8.** மனிதநேய அறநெறிப் பணிகளுக்கு ஒவ்வொரு சைவரையும் சைவ அறப்பணி நிதியத்திற்கு பங்களிக்குமாறு வேண்டுகோள்.

**9.** சைவ சமயம் எதிர் நோக்கும் சட்ட பிரச்சனைகளை, சவால்களை எதிர் கொள்ள.ஓய்வுபெற்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் உள்ளடங்கிய சைவ சட்டவாக்கற் குழு உருவாக்கம்.

**10.** சீவகாருண்யதமிழ்மருத்துவர்,கல்வியலாளர்ஒன்றியங்களைதுணை அமைப்புக்காக உருவாக்கி மனிதநேய உணர்வோடு சீவகாருண்யமிக்க மருத்துவ கல்விச் சேவைகளை மூலை முடுக்கெங்கும்வினைத்திறனாக முன்னெடுத்தல்.

மேற்காணும் 10 அம்ச பிரகடனத்தை செயலுரு பெற வைக்க அனைத்து சைவ சமயிகளையும் பங்களிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரசு கவனம் செலுத்த வேண்டிய கோரிக்கைகள் அரச அதிபர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர், சமூக வலுவூட்டல் அமைச்சர் ஆகியோரிடம் இன்று மதியம் யாழ் மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டது.



# தமிழர் மரபை பறை சாற்றும் சிவபூமி அருங்காட்சியம்




**த**மிழர் மரபை பறை சாற்றும் சிவபூமி அருங் காட்சியகம் நேற்றைய தினம் 2501 2020 கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது .

தமிழர்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் எடுத்து காட்டும் சிவபூமி யாழ்ப் பாண அரும் பொருள்காட்சியகம் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் சைவஞானபானு ஆறுதிருமுருகன் தலைமையில் இந்நிகழ்வு சைவத்தமிழர் பாரம் பரியத்துடன் நடைபெற்றது.கோமாதா வழிபாடு , விநாயகர் வழிபாட்டின் பின்னர் அரும்பொருள் காட்சியகத்தின் பெயர் பலகை திரை நீக்கம் செய் யப்பட்டது.

அரும் பொருட்காட்சியத்தின் நுழைவாயிலை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்மந்த பரமச்சாரிய சுவாமிகள் திறந்து வைத்தார்.

கலாநிதி செஞ்சொற்செல்வர் சைவஞானபானு ஆறுதிருமுருகன் ஐயாஅவர்கள் தலைமை தலமை யுரையினை நிகழ்த்தினார் .

மங்கள விளக்கை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்மந்த பரமச்





சாரிய சுவாமிகள் ஏற்றி ஆசியுரை வழங்கினார்.

அபிராமி கையிலாசபிள்ளை அவர்களினால் அரும் பொருட்காட்சியகத்தின் முதலாம் தளம் திறந்து வைக்கப்பட்டது.

மூன்றாம் தளத்தை சட்டத்தரணியும் அகில இலங்கை இந்து மாமன்ற தலைவரும் திருக்கேதீச்சர திருப்பணி சபை தலைவருமான அமரர் கந்தையா நீலகண்டனின் துணைவியார் சட்டத்தரணி சசிதேவி நீலகண்டன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாவது தளத்தில் ஈழத்து புலவர்கள் ,பண்டிதர்கள்,பாடசாலைகளை ஆரம்பித்தவர்கள், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பழமையான தோற்றங்கள் ,கீரிமலை நகுலேவரம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், கோணேச்சரம் உள்ளிட்ட ஆலயங்களின் ஆதிகால புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு ள்ளன. கலாநிதி ஆறுதிருமுருகன் ஐயா,சின்மயாமிசன் சுவாமி சிவகாசானந்த அவர்கள், இந்து குருமார் ஒன்றிய தலைவர் சித்தாந்த பண்டிதர் பிரதிஷ்டா பூஷனம் சிவஸ்ரீ ஜெகதீஸ்வர குருக்கள் ஆகியோர், காட்சியகத்துக்குள் வண்டில்கள் ,கூடார வண்டில், திருக்கை வண்டில், சவாரி வண்டில் உட்பட முன்னோர்கள் பயன்படுத்திய போக்குவரத்து வாகனங்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளதைப் பார்வையிட்டனர்.

அத்துடன் தமிழ்ர்களின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய பொருட்கள் முதல் தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தத்தில் இன்று சிவபூமி அருங்காட்சியகம் தமிழ்ர்களின் வரலாற்றையும் பெருமையையும் வெளிப்படுத்தி தலைநிமிர்ந்து நிற்கிறது.








● மன நலம்

# தற்கொலை

**(பெப்ரவரி மாதத் தொடர்ச்சி)**

**த**ற்கொலை (Suicide) என்பது விருப்பத்துடன் ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்ளும் செயலாகும். மன அழுத்தம், மனப்பித்து, இருமுனையப் பிறழ்வு, ஆளுமைச் சிதைவு, குடிப்பழக்கம், குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, பென்சோடையசிபைன்கள் பயன்பாடு போன்ற பல காரணங்களில் ஒன்றோ அல்லது பல காரணங்களோ ஒருவரைத் தற்கொலைக்குத் தூண்டலாம். பொருளாதாரச் சிக்கல்கள், அடாவடியாக கொடுமைக்கு ஆளாதல், உறவுகளின் பிரச்சினைகள் போன்ற மன அழுத்தக் காரணங்களும் ஒருவரை தற்கொலைக்குத் துண்டலாம்.

தற்கொலை முயற்சியில் ஒருமுறை ஈடுபட்ட ஒருவர் எதிர்காலத்தில் மீண்டும் தற்கொலைக்கு முயற்சி செய்யும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன. துப்பாக்கி வகைகள், மருந்துகள் மற்றும் நஞ்சுப் பொருட்கள் முதலானவற்றை எளிதில் கிடைக்கச் செய்யாமல் தடுப்பதும் தற்கொலையை தடுக்கும் ஒரு முறையாகும்.



திருமதி.
பவானி சற்குணசெல்வம்
(கொலண்ட)

## மனப்பதட்ட நோய் (Anxiety Disorder)

- நெஞ்சுப் படபடப்பு
- கை நடுக்கம்
- அதிகமாக வியர்த்தல்
- நெஞ்சுவலி
- எதிலும் கவனம் செலுத்த இயலாமை
- தூக்கக் குறைவு
- அடிக்கடி எரிச்சல் அடைதல்
- எதிர்மறையான எண்ணங்கள்

## பய நோய் (Phobia)

- தனிமையில் இருக்க பயம்
- கூட்டத்தினைக் கண்டுபயம்
- புதிய நபர்களை எதிர்கொள்ளப் பயம்
- உயரமான இடங்களுக்குச் சென்றால் பயம்
- மூடிய இடங்களைக் கண்டு பயம்
- இந்த பயங்கள் தேவையற்றது என கருதி தவிர்க்க நினைத்தும் இயலாத நிலை
- எண்ணம் மற்றும் செயல் சுழற்சி நோய்
- திரும்ப திரும்ப ஒரே எண்ணங்கள் மனதிற்குள் வந்து தொல்லை தருவதும், அவை தேவையற்றது என தெரிந்து தவிர்க்க முற்பட்டும் முடியாத நிலை.
- ஒரு நாளின் பெரும் பகுதி இந்த எண்ணங்களோடு போரா டுவதிலேயே செலவாகிவிடுவது
- திரும்ப திரும்ப ஒரே செயலைச் செய்து கொண்டு இருப்பது

**உதாரணமாக:**

- திரும்ப திரும்ப கை அழுக்காக இருப்பதாக நினைத்து கை அலம்புதல்
- பூட்டினை மீண்டும் மீண்டும் இழுத்து சரிபார்ப்பது
- பணத்தினை மீண்டும் மீண்டும் எண்ணி சரிபார்ப்பது
- ஒரு செயலை திரும்ப திரும்ப பலமுறை செய்தால் மட்டுமே திருப்தி ஏற்படுவது.
- தவிர்க்க முற்படும்பொழுது திருப்தியின்னையும், மனப்பதற்றமும் ஏற்படுவது.

## ஆளுமை கோளாறுகள் (Personality Disorders)

- அடிக்கடி கோபம் கொள்ளுதல்
- குறுகிய கால குணமாறாட்ட அறிகுறிகள்
- மற்றவர்களுடன் உள்ள உறவுகளை அடிக்கடி முறித்துக் கொள்ளுதல்
- உடல் உறுப்புகளைத் தானே காயப்படுத்திக் கொள்ளல்
- கலவரங்களில் ஈடுபடுதல்
- சமூகத்திற்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுதல்
- மற்றவர்களுடன் அதிகம் பழகாமல் தனித்து ஒதுங்கி வாழ்தல்
- பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமை
- எப்பொழுதும் சோர்வாகவும், மந்தமாகவும் இருத்தல்
- எப்பொழுதும் பதற்றமாக இருத்தல்

## பெண்களும் மன அழுத்தங்களும்

**மாதவிடாய் நாட்களுக்கு சிறிது முன்பாக**

- அதிக எரிச்சல்
- கோபம்
- சோர்வு
- பதற்றம்
- இவை, மாதவிடாய் முடிந்ததும் சரியாகிவிடும்.

## கர்பிணி பெண்களும் மனநோய்களும்

- குழந்தைகளுக்கு பால் ஊட்டாமை
- அடிக்கடி அழுதல்
- தூக்கமின்மை
- பசியின்மை
- தற்கொலை எண்ணங்கள்
- தனக்குத்தானே பேசிக்கொள்ளுதல், சிரித்துக்கொள்தல்

## முதியோர்களை பாதிக்கும் மனநோய்கள்

- தொடர் தூக்கமின்மை
- மறதி
- பொருட்களை வைத்த இடத்தை மறத்தல்
- நாள், கிழமை மறந்து விடுவது
- உறவினர், நண்பர்களை மறந்து விடுவது
- அடிக்கடி எரிச்சல் கோபம் கொள்வது
- பசியின்மை



## இதர மனநோய்கள்

- சாமியாட்டம்
- புகை பிடித்தல்
- மது அருந்துதல்
- கணவன் மனைவி பிரச்சனைகள்
- மனரீதியான பாலியல் பிரச்சினைகள்

## குழந்தைகளை பாதிக்கும் மனநோய்கள்

- குழந்தைகள் பள்ளி செல்ல பயப்படுதல்
- படிப்பில் கவனம் குறைதல்
- அதிக கோபம் கொள்ளுதல்
- அடிக்கடி எரிச்சல் அடைதல்
- படுக்கையில் சிறுநீர் கழித்தல்
- மிக மிக அதிக சுறுசுறுப்போடு, ஆனால் கவனம் இல்லாமல் இருத்தல் (அ௲ஏ௲)
- கீழ்படியாமை
- அடிக்கடி பொய் சொல்வது
- குழந்தைக்கு திடீரென்று மூச்சு நின்றுபோய் திரும்பவருதல் (Breath holding spell)
- 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் (PICA) சாப்பாடு அல்லாதமற்ற பொருட்களை உண்ணுதல் (உதரணமாக சாம்பல், மண், பேப்பர், பென்சில் சாப்பிடுவது)
- மிக பிடிவாதம் பிடித்து தரையில் உருண்டு புரள்வது (Temper Tantrums)



★ நன்றாக படிக்கும் மாணவன் திடீரென்று படிப்பில் பின்தங்குவது (Changes in academic performance)

★ குழந்தையை பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது அம்மாவைவிட்டு பிரிதலில் பதட்டம் (Seperation anxiety disorder)

## தற்கொலை நடத்தை நிகழ்தகவை மதிப்பீடு செய்தல்

தற்கொலை நடத்தை என்பது பெரும்பாலான மக்களுக்கு தினசரி தலைப்பு அல்ல, அதைப் பற்றி பேசுவதும் கடினமாக இருக்கும். ஒருவர் தற்கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்போது, தற்கொலை நடத்தைக்கான வாய்ப்பை மதிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும்.இந்த சூழலில், உறுதியான திட்டங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளனவா என்பதும், அந்த நபரின் வாழ்க்கை எவ்வாறு கருதப்படுகிறது என்பதும் குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அதைப்பற்றிய கேள்விகளில் பின்வருவன அடங்கும்:

★ ''இறக்க வேண்டும் என்று நீங்கள் எப்போதாவது நினைத்தீர்களா?''

★ ''நான் இறக்க விரும்புகிறேன் என்று நீங்கள் எத்தனை முறை நினைத்தீர்கள்?''

★ ''உங்கள் மனதில் தற்கொலைக்கு சில வழிகள் திட்டங்கள் உள்ளனவா?''

★ ''தற்கொலை செய்வதிலிருந்து உங்களைத் தடுக்கும் சூழ்நிலைகள் உள்ளனவா?''

## தற்கொலையைத் தடுக்கும் நம்பிக்கை:

''நான் இறக்க விரும்புகிறேன்'' என்று சொல்லும் அல்லது நினைக்கும் அனைவரும் உண்மையில் இறக்க விரும்பவில்லை. மக்கள் பெரும்பாலும் மரணத்தைத் தவிர வேறு எந்த தீர்வையும் காணவில்லை. மரணத்தைத் தவிர வேறு தீர்வுகளை மக்கள் பார்க்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவது தற்கொலையைத் தடுப்பதற்கான ஒரு முக்கிய வழியாகும். இதற்கு பெரும்பாலும் ஒரு சிறப்பு சிகிச்சையாளரின் உதவி தேவைப்படுகிறது. மக்கள் மரணத்தைத் தவிர வேறு தீர்வுகளைப் பார்க்கும்போது, அவர்களும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறார்கள். தற்கொலையைத் தடுக்க அல்லது முயற்சிக்க பெரும்பாலும் நம்பிக்கை அவசியம்.

## தற்கொலை மற்றும் சமிக்ஞைகள்

தற்கொலை செய்து கொண்ட பெரும்பாலான மக்கள் அந்தக் காலத்திற்கு முன்பே பல்வேறு சிக்கல்களைச் சந்தித்தார்கள், அதற்காக அவர்கள் எந்த தீர்வையும் காணவில்லை. அவர்கள் ஆரம்பத்தில் நேரடியாக மரணத்திற்காக அல்ல, ஆனால் அவர்களின் பிரச்சினைகளைத் தடுக்கும் மிக தீவிரமான வழியைத் தேர்ந்தெடுத்தனர்.

## தற்கொலைக்கு முன் சமிக்ஞைகள்

தற்கொலைக்குப் பின்னர் இறந்த 75% மக்களில், எஞ்சியிருக்கும் உறவினர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, நனவாகவோ அல்லது அறியாமலோ, இழந்த அன்புக்குரியவரின் சமிக்ஞைகளைப் பெற்றனர்.

இதன் பொருள் என்னவென்றால், உண்மையில் தற்கொலை செய்து கொள்ளும் பெரும்பாலான மக்கள் முன்கூட்டியே சமிக்ஞைகளை வழங்குகிறார்கள், அதை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் நாம் அதை நம்பி நடவடிக்கை எடுக்க வேண்டும். கவனம் தேவை என்று தோன்றும் நபர்களையும் தீவிரமாக பாது காக்க வேண்டும். இது அவர்களுக்கு இருக்கும் பிரச்சி னைகளுக்கான உதவிக்கான அழைப்பு. அதைப் பற்றி பேசுவது அன்புக்குரியவரின் மனதை மாற்றிக்கொள்ளும். சில நேரங்களில் அவர்கள் நினைத்ததை விட பிரச்சி னைகள் தீர்க்க எளிதாக இருக்கும். சூழ்நிலைகள் காரணமாக உதவ முடியாவிட்டால், தொழில்முறை உதவி கோரப்பட வேண்டும்.

## பிரியாவிடை கடிதம்

தற்கொலை செய்து கொண்டவர்களில் கால் பகுதியினர் விடைபெறும் கடிதத்தை விட்டுச் செல்கின்றனர். ஓரளவு இளையவர்கள் பெரும்பாலும் தங்கள் கோபத்தை விவரிக்கிறார்கள் அல்லது பழிவாங்கும் உணர்வை வெளிப்படுத்துகிறார்கள், வயதானவர்கள் பெரும்பாலும் உறவினர்களைப் பற்றிய தங்கள் கவலைகளை விவரிக்கிறார்கள். சில நேரங்களில் ஒருவர் மனநல கோளாறால் அவதிப்பட்டதாகத் தெரிகிறது. தற்கொலை என்பது ஒரு நோய் அல்ல, ஆனால் நடத்தை. பெரும்பாலும் உளவியல் பிரச்சினைகள் தற்கொலைக்கான காரணங்களாக காணப்படுகின்றன.

## தற்கொலைக்கு எந்த முறை பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறது?

பெரிய எண்ணிக்கையிலான Paracitamol பரவலாகப் பயன்படுத்தப்படும் அல்லது பல்வேறு ஆண்டிடிப்ரஸன் (antidepressiva) மருந்துகள், விஷம் குடிப்பது அல்லது நீரில் மூழ்குவது, மருந்து அதிகப்படியான அளவு குடிப்பது போன்றன மிகவும் பிரபலமான முறைகளாகும்.

கயிற்றில் தொங்குவது அல்லது ஆயுதத்தைப் பயன்படுத்துவது போன்ற வன்முறை முயற்சிகள் குறைவாகவே தேர்ந்தெடுக்கப்படுகிறது.

## கலக்கத்தின் ஒரு கணம் மூலம் தற்கொலை
## (Suicide by a moment of bewilderment)

ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒருவர் விருப்பத்துடன் குதிக்க முடிவு செய்தார். அவர் குதித்து தப்பித்து சிகிச்சையில் சென்றார். அவர் தனது உளவியலாளரிடம் உண்மையில் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் எதுவும் இல்லை, ஆனால் திடீரென்று குதிக்கும் வேட்கையை உணர்ந்ததாக கூறினார். திகைப்பின் ஒரு பயங்கரமான தருணம்.

## துக்க செயலாக்கம்
## (mourning processing)

தற்கொலை செய்து கொண்ட அன்புக்குரியவரின் மரண த்தை செயலாக்குவது அல்லது இழப்பை ஏற்றுக்கொள்வது மிகவும் சிக்கலானது. தப்பிப்பிழைத்தவர்கள் அதை எவ்வாறு தடுத்திருக்கலாம் அல்லது அதைத் தடுக்க அவர்கள் சரியான முறையாக செயல்படவில்லை என்று குற்ற உணர்ச்சியுடன் போராடுகிறார்கள். ஏன் போன்ற கேள்விகளுக்கு அவர்களுக்கு சில நேரங்களில் தெளிவான பதில் கிடைக்காது. இது செயலாக்க கடினமாக உள்ளது. சக தோழர்களின் அல்லது அதே பிரச்சி னைகள் உள்ளவர்களின் தொடர்புகள், உரையாடல்கள் அன்புக்குரியவரின் மன வலியைப் போக்க உதவும்.



# சைவமும் தமிழும்

சைவமும் தமிழும் சொல்லும்
சாத்திரம் மறைகள் எல்லாம்
மைவரை உலகந் தன்னில்
மனிதமும் இறையும் விள்ளும்
தைவர மலர்ந்த வண்ணம்
தத்துவம் பனுவல் செப்பக்
கைவரப் பெற்ற தொன்மைக்
காலங்கள் பெருமை கொள்ளும் !

இயற்கையின் விதிகள் விஞ்சும்
இறைவனை உளிகள் சொல்லும்
முயற்சியை மனித மாக்கும்
வேரினைச் சமயஞ் சொல்லும்
அயர்ச்சியில் மறந்த வற்றை
அருந்தமிழ் சைவம் காட்டும்
பயிற்சியில் மரபுண் டாக்கும்
பரம்பொருள் உதிக்கும் அம்மா!

திருமூலர் நெறியிற் செல்லும்
திருமொழி யதுவே செம்மைத்
தருமமும் அறமுங் கீர்த்தித்
தலங்களும் விதியுண் டாக்கும்
கருவறை திறக்கும் தெய்வக்
கணங்களும் சுரங்கள் பாடும்
உருவமும் சைவத் தின்பால்
உயர்ந்ததே இருப்புக் காட்டும்; !

சுவரிருந் தாலே மட்டும்
சித்திரம் வரையு மென்பார்
தவமிருந் தாலே சக்தித்
தருமிறை உருக நிற்பார்
கவனிருந் தாலே தென்னன்
கைலையும் கருணை யாக்கும்
நவையுறு காட்சி நல்கும்
நவயுகம் மகிமை காக்கும் !
தமிழொடும் மரபுண் டாக்கும்
சமநிலம் பயிருண் டாக்கும்
கமழ்விடும் சைவம் வேதக்
கலங்கரை விளக்க மாக்கும்
அமைவொடும் ஈர்க்கும் ஈசன்
அற்புதப் பிரபஞ் சத்தும்
இமையவர் வாழ்வும் சைவம்
இயற்றிடும் தமிழென் றாகும் !

நெய்யொடு நிகழும் தீபம்
நிலத்தினிற் தமிழே பாடும்
மெய்தரும் தேவா ரங்கள்
விளங்கிடும் நெறிகள் காட்டும்
கைவரப் பொதிகை மங்கை
கடவுளர் புகழே சொல்வாள்
சைவமும் தமிழும் செந்தேன்
சங்கதி காட்டும் அம்மா !

ஆதியும் நடுவு மானாய்
ஐம்பெரும் பூத மானாய்
ஓதரும் வேத மானாய்
ஒப்பரும் மறைக ளானாய்
வேதனை வினைக ளாற்றும்
விரைகழல் உலக முற்றும்
தீதற நிற்கும் தெய்வம்
சிவன்ஒளி போற்றி போற்றி!



தேசபாரதி தீவகம்
**வே.இராசலிங்கம்**
கனடா



கலாநிதிபால. சிவகடாட்சம் எழுதும்

# யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்

## சுக்கு(வேர்க்கொம்பு)

சுக்குக்கு நெஞ்செரிப்புத்
தொண்டு வழலையறும்
கக்கு இருமல்தனைச்
சாடுமேமொக்குமென்
மூக்கு நீர்ப்பாய்ச்சல் போம்
மூலக்கிராணியறும்
போக்குமே கண்குளிரும்போது

**இதன் பொருள்:** சுக்கு நெஞ்செரிவு, தொண்டை நோவு என்பவற்றைச் சுகப்படுத்தும். இருமல், மூக்கால் நீர்வடிதல், மூலக்கிறாணி என்பவற்றுக்கும் சுக்கு மருந்தாகும்.



**மேலதிகவிபரம்:**இந்தியமருத்துவத்தில் சுக்குக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.'சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை சுப்பிரமணியனை மிஞ்சிய கடவுளும் இல்லை' என்பது ஒரு பழமொழி.

**Figure 4 Dried Ginger (சுக்கு)**

சுக்கும் கற்கண்டும் சம அளவில் எடுத்துத் தூளாக்கவும். இந்தக்கலவையில் ஒரு மேசைக்கரண்டி தூளை இளநீரில் கரைத்துக்குடிக்கநெஞ்செரிவு குறையும். இதையே பசையாக்கித் தொண்டையில் பூச தொண்டை நோவு குணமாகும்.சுக்குத்தூளைக் கருப்பஞ்சாற்றில் கலந்து தினமும் காலையில் குடிப்பதன்மூலம் வயிற்றில் எரிவு போன்றவை ஏற்படாமல் தவிர்க்கலாம்.சுக்கைத்தேனீருடன் சேர்த்தும் பருகலாம்.

இருமல், காய்ச்சல் என்பவற்றுக்கும் சுக்குக்குடிநீர் நிவாரணம் தரும். வியர்வையை உண்டாக்குவதன்மூலம் இது உடல்வெப்பத்தைக் குறைக்கிறது.

செமியாக்குணம், வாய்வு என்பற்றுக்கும் சுக்கு மருந்தாகும். சுக்கில் உள்ள ஜிஞ்ஜெறோல் (gingerols)என்னும் பொருள் பெருங்குடலில் ஏற்படும் புற்றுநோயைத் தவிர்க்கவும் மேலும் பரவாமல் தடுக்கவும் உதவுகிறது.

முட்டுக்கள், தசைநார்கள் என்பவற்றில் நோவு, வீக்கம், இறுக்கம்



கலாநிதிபால.
சிவகடாட்சம்



## Figure 5 Long Pepper (திப்பிலி)

**மேலதிகவிபரம்:**நெஞ்சுச்சளியுடன் கூடிய இருமலுக்கு திப்பிலித்தூள் 125 மில்லிகிராம் முதல் 250 மில்லிகிராம் வரை தேனுடன் அல்லது இளஞ்சூடான நீருடன் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை சிறுவர்களுக்குக்கொடுக்கலாம். பெரியவர்களுக்கு இத்தூளின் அளவு1கிராம் தொடக்கம் 3 கிராம் வரை இருக்கலாம்.

சளி இல்லாத வரட்டு இருமலாயின் தேனுக்குப்பதில் வெல்லம் அல்லது அதிமதுரம் சேர்க்கலாம். இம் மருந்தைச்சாப்பிட்டவுடன் சிறிதளவு சூடான வெந்நீர் அருந்தவேண்டும்.திப்பிலித்தூளைத் தேன் அல்லது வெந்நீர் சேர்க்காமல் அருந்தக்கூடாது.

திப்பிலிவேர் தலைவலிக்குச் சிறந்த மருந்து என்பது ஆயுர்வேதமருத்துவர்களின் ஒருமித்த கருத்தாகும். கூடவே இருமல், தடுமல், சளிக்கட்டு என்பவற்றுக்கும் இது மருந்தாகப் பயன்படுகிறது.

என்பவற்றுக்குக் சுக்குகைகண்ட மருந்தாகும். சுக்கில் உள்ள ஜிஞ்ஜெறோல்என்னும் இரசாயன உள்ளடக்கம் வலியை ஏற்படுத்தும் ஹோர்மோன்கள் உருவாவதைத் தடுத்துவிடுகின்றது. நாள்தோறும்உணவில்குறைந்தது ஒரு தேக்கரண்டி சுக்குத்தூள் சேர்த்துக் கொள்ளவேண்டும்.வீக்கம் காணப்படும் மூட்டுக்களில் அல்லது முழங்காலில்சுக்குப்பசையைப்பூசுவதன்மூலம் வீக்கத்தைக்குறைக்கலாம். சுக்குத்தூளைக் காற்றுப்புக முடியாத குப்பிகளில் அடைத்துவைத்துப் பயன்படுத்தவேண்டும். குளிர்சாதனப்பெட்டியில்வைத்துநீண்ட நாட்கள் பயன்படுத்தலாம்.

பித்தக்கல் (gall stones)பாதிப்பு உடையவர்கள்சுக்கைத்தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

Gingerஎன்பது இதன்ஆங்கிலப்பெயர்.

Zingiber officinale ROSC.என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## திற்பிலி

*அய்யமுடன்வாதமணுகாதுஅம்புவியில்*
*நய்யாமல் திற்பலியைநன்னுவார்வெய்யச்*
*சுரமும்திரிதோஷமும்துரத்தும்தலைவலியும்*
*பொருமும்வாய்வுபலவும்போம்*

**இதன் பொருள்:** இருமல் ஆஸ்த்மாநெஞ்சுச்சளி போன்ற சுவாசக்குழாய் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்குத் திப்பிலி மருந்தாகப்பயன்படும். முத்தோஷங்களையும் போக்கும். தலைவலி, வாய்வு என்பவற்றையும் குணமாக்கும்.



திப்பிலிவேர்த்தூள் சிறுவர்களுக்கு 250 மில்லிகிராம் தொடக்கம் 500மில்லிகிராம் என்ற அளவிலும் பெரியவர்களுக்கு 2தொடக்கம் 3கிராம் என்ற அளவிலும் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள்கொடுக்கவேண்டும். திப்பிலித்தூளை 3தொடக்கம் 5கிராம் அளவிலான நெய், பட்டர் அல்லது தேனுடன் சேர்த்துஅருந்திவிட்டு



உடனே வெந்நீர் அல்லது பாலைக்குடிக்கவேண்டும். இம்மருந்தை வெறும்வயிற்றில் எடுப்பது நல்லது.

கர்ப்பிணிப்பெண்கள் இம்மருந்தை எடுத்தல்கூடாது.

Long pepperஎன்பது இதன் ஆங்கிலப்பெயர்.

Piper longum L.என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## மிளகு

சோகைகபதோஷம்போம்சூலைசுரங்களறும்
தாகமறும்மந்தமதைப்போக்கும்மேகம்
சிரங்குகிருமியுடன்சில்விஷங்கள்நாசம்
பொருந்துமிளகருந்தும்போது



**இதன் பொருள்:** காமாலை(சணச்னுட்டிச்) மற்றும் இருமல் தடுமல் மூக்குநீர்ப்பாய்ச்சல் போன்ற கபம் சம்பந்தப்பட்ட நோய்கள்தீரும். வயிற்றுவலி, சுரம், தாகம், மந்தம் என்பவற்றைப்போக்கும். மிளகு அருந்துவதனால் தோல்வியாதிகள். சிரங்கு, கிருமித்தொல்லை, சிறுவிஷங்கள் என்பனவும் தீரும்.

**Figure 6 Black Pepper (மிளகு)**

**மேலதிகவிபரம்:**'பத்துமிளகு கையில் இருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம்' என்பது மருத்துவப் பழமொழி. உணவுடன் வயிற்றுள்சென்று சேரக்கூடிய பல்வேறு வகையான நச்சுக்கிருமிகளை அழிப்பதுடன் சமிபாட்டையும் ஊக்குவிக்கும் மிளகு மேற்குலகமக்களின் உணவில் தவிர்க்கமுடியாத கறிச்சுவையூட்டியாக(spice) இடம்பெற்றுவிட்டது. போர்த்துக்கேயர் மிளகாயை இலங்கை இந்திய மக்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டுத் தாம் மிளகைத் தங்குதடையின்றிப் பெற்றுக்கொள்ளவழிவகுத்துக்கொண்டார்கள்.

வயிற்றில் புரதச்சமிபாட்டுக்குத்தேவையான ஹைட்றோக்குளோறிக் அமிலத்தின்(hydrochloric acid) சுரப்பை ஊக்குவித்து இறைச்சி, மீன், முட்டை போன்ற புரத உணவுகள் துரிதமாகச் சமிபாடு அடைய மிளகு உதவுகிறது.

Black pepperஎன்பது இதன் ஆங்கிலப்பெயர்.

Piper nigrum L. என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.







## திரிகடுகம்

*திரிகடுகுநல்லதிரிபலையும் கொண்டால்*
*பிறகிடுமேநோய்களெல்லாம் பின்னும்கிறுகிடுமே*
*திரிதோஷமெல்லாம்சிதறிடுமே நின்றுன்*
*அறிவால் இதையறிந்துஓது.*

**இதன்பொருள்:** சுக்கு மிளகு திப்பிலி மூன்றும் சேர்ந்த திரிகடுகமும் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் என்னும் மூன்றும் சேர்ந்த திரிபலையும் எடுத்துக்கொள்பவர்களை நோய்கள் அண்டாது. வாதம் பித்தம் கபம் என்று சொல்லப்படுகிற முத்தோஷங்களும் விலகிப்போம்.

**மேலதிகவிபரம்:** சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றினது தூளையும் சம அளவில் கலந்து பெறப்படுவதே திரிகடுகம் ஆகும்.கிறைன்டரில் அரைப்பதன்மூலம் நல்ல தூளைப் பெறலாம்.இதனைத்தயாரித்து காற்றுப்போகமுடியாத ஒரு போத்தலில் அடைத்திவைத்துப் பயன்படுத்தலாம்.

பெரியவர்களுக்கு இத்தூளில் 3கிராம் வெந்நீருடன் அல்லது தேனுடன் ஒருநாளைக்கு மூன்றுதடவைகள் கொடுக்கலாம். சிறார்களுக்கு வயதுக்குத்தகுந்தபடி 125மில்லிகிராம் முதல் 500மில்லிகிராம்வரை கொடுக்கலாம்.

குறிப்பிட்ட அளவு திரிகடுகத்தூளை ஒரு கோப்பை பாலில் கலந்து சிலநிமிடங்கள் கொதிக்க வைத்து ஆறியவுடன் இளஞ்சூட்டோடு குடிக்கவும்கொடுக்கலாம்.

தேனுடன்சேர்த்து எடுக்கும்போது திரிகடுகம் தடுமல், இருமல், முட்டு, ஆஸ்த்மாஉடற்பருமன் போன்ற பலவியாதிகளுக்கு மருந்தாக உள்ளதுடன் சமிபாட்டுச்சக்தியையும் ஊக்குவிக்கின்றது.

# கீரிமலை மெய்கண்டார் ஆதீன 3 ஆவது குரு மகா சந்நிதானமாக தவத்திரு உமாபதிசிவம் அடிகளார் அருளாட்சி ஏற்றுள்ளார்







**போற்றி ஓம் நமசிவாய**

கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் மீள் உருவாக்கம் பெற்று 3 ஆம் குரு மகா சந்நிதானமாக தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் பதவியேற்கும் நிகழ்வு மாசி மகம் நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) கீரிமலை குழந்தைவேல் சுவாமி சிவாலய ஈழத்து தமிழ் சித்தர் பீடத்தில் இடம் பெற்றது.

அகில இலங்கை சைவ மகா சபையின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளாரால் உமாபதி சிவம் மூன்றாம் குருமகா சந்நிதானமாக சிவஞான தீக்கை வழங்கி திருநிலைப் படுத்தப்பட்டார். சிவத்தமிழ் சிவாச்சாரியார்கள் பன்னிருவர் இணைந்து மேற்கொண்ட செந்தமிழ் யாகத்துடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த துறவிகள், குருமார்கள், ஆலய தர்ம கர்த்தாக்கள், கல்வியியலாளர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், சிவதொண்டர்கள் என பலர் கலந்துகொண்டனர். கலந்துகொண்டவர்களை உள்ளடக்கி 20 பேர் அடங்கிய ஆதீன செயலணியும் உருவாக்கப்பட்டது.



மெய்கண்டார் ஆதீனம் தமது ஆன்மீக மனித நேயத் தளங்களில் சிறப்பாக பணியாற்றுவதற்கான செயற்றிட்டங்களை இச் செயலணியினர் தயாரித்து வழங்கி சைவத் தமிழர்களின் வாழ்வியலில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவர் எனவும் இங்கு கூறப்பட்டது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் சிறி.சற்குணராசா, இங்கு கருத்து தெரிவிக்கையில், மெய்கண்டார் ஆதீனத்தின் மீள் உருவாக்கம் சைவர்கள் தங்கள் மண்ணில் தம் பாரம்பரியத்தை காக்கும் வரலாற்று தேவையை நிறைவுசெய்ய இன்றியமையாதது எனத் தெரிவித்தார்.





# மனநலம் மன்னுயிர் காக்கும்

மனத்தூய்மையும் செயற்றூய்மையும் சிறப்பாக அமையும் போதுதான் ஒருவன் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழமுடியும். இதனாலேயே நம் முன்னோர்களால் ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டதாக பேணப்பட்டு வந்தது. இதனையே திருவள்ளுவர் தனது குறளில் பின்வருமாறு கூறுகின்றார்.

''ஒழுக்கம் விழுப்பந்தரலான்
ஒழுக்கம் உயிரினும்
ஓம்பப்படும்.''

இதனையே சித்தர்கள் இறைவனை அடைவதற்கான வழிமுறைகளான அட்டாங்க யோகங்களில் முதல் இரண்டு யோகங்களான இயமம் (மனத்தூய்மை), நியமம் (செயற்தூய்மை) பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். இவை இரண்டும் சாத்தியப்பட்டாலேயே ஏனையவையான ஆசனம்,பிராணாயாமம், பிராத்தியாகாரம்,தாரணை, தியானம், சமாதி என்பன சாத்தியப்பாடாகும்.




இவ்வுலகில் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக மகிழ்வாக வாழ்வதற்கு, அட்டாங்க யோகங்களில் முதல் நான்கும் போதும். அதில் மனத்தூய்மை செயற்தூய்மை என்பன இருந்தாலே வாழ்வு வளமாகும்.

மனத்தூய்மை செயற்தூய்மை பற்றி திருமந்திரத்தில் திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார்.

''கொல்லான் பொய்கூறான்,
களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான்
நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான்
மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்திடையில்
நின்றானே''

இது யோக வழியின் முதன் நிலையாகும். இதன் வழி மனதளவில் நடப்பவர் ஒரு உயிரையும் கொல்லமாட்டார், பொய் சொல்லமாட்டார், களவில் ஈடுபடமாட்டார், பிறரை மதிக்கும் நற்குணமுடையவராக



சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்
BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition
மானிப்பாய்.

இருப்பார், நல்லவர், அடக்கமுடையவர், நடுநிலையானவர், தன் பொரளை பிறர்க்கு தரநினைப்பவர், கள்காமம் இல்லாதவர். இவை யாவற்றையும் சிந்திக்கக்கூடிய மனத்தினைக் கொள்ளலே இயமம்.( ம்ம்ம் .... யாரும்ஆரோக்கியமாகஇருக்கிறீங்களா????)


''தூய்மை அருளூண்
சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை
வளர்த்தலே மற்றியவை
காமங்களவு
கொலையெனக் காண்பவை
நேமியீரைந்து
நியமத்தனாமே''

தூய்மை என்பது, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியுடைமை ஆகியவற்றைக் கடைப்பிடித்தல். காமம் என்பது, களவு, கொலை ஆகியவற்றை தவிர்த்தல் போன்றனவற்றை கடைப்பிடித்தல் ஆகும்.

மனத் தூய்மையின்மையால் பாதிக்கப்படுவது பற்றி பின்வரும் முதுமொழி பின்வருமாறு கூறுகிறது.' தன்நெஞ்சே தன்னைச் சுடும்' என்றும் செயற்றூய்மையின்மையால் பாதிக்கப்படுவது பற்றி பின்வரும் முதுமொழி கூறுகின்றது, 'தன்வினை தன்னைச் சுடும்'.

மனம், உடல் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. மனமது போக்கிலேயே உடலானது இருக்கும். இதனையே நோய்க்கான காரணத்தை சித்தர்கள் கூறும்போது 'விரும்பியது கிடைக்காமையும் விரும்பாதது கிடைத்தலும் ரோகத்தை உண்டு பண்ணும் என்றுகூறுகின்றனர். இதிலிருந்து இயமம், நியமம் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பது கண்கூடு. இன்று அதிகரித்து வரும் தொற்றா நோய்களான சலரோகம், அதிகுருதிஅமுக்கம், கொலஸ்திரோல், மூச்சுக்கஸ்டம் (இரைப்பு), புற்றுநோய் எனபலவும் இன்று அதிகரித்திருப்பதன் காரணமே இயமம், நியமம் தவறுவதேயாகும்.

இதனையேஅகத்தியர்பின்வருமாறுகூறுகின்றார்,




''மனமது செம்மையானால்
மந்திரஞ் செபிக்கவேண்டா
மனமது செம்மையானால்
வாயுவை உயர்த்தவேண்டா
மனமது செம்மையானால்
வாசியை நிறுத்தவேண்டா
மனமது செம்மையானால்
மந்திரஞ்செம்மையாமே''

மனத்தின் அழுக்கு நீங்கப் பெறாதவன் யோகியானாலும், அவன் தவத்திலே இருந்த போதும் பயனில்லை, மனத்தின் அழுக்கு அறுந்து விட்டால் அவன் எப்போதும் எந்தச் சூழலிலும் மாசற்றவனாயும், பிறப்பினை அறுத்துநரை, திரை, மூப்பு, பிணி இவற்றைக் கடந்து இருப்பான் என்கின்றார்.

எனவே மனநலன் காத்து, உள உடல் சமூக ஆரோக்கியம் பெற்று வாழ்வோமாக. இவைதான் அன்பேசிவம் என்னும் இரண்டு சொல்லில் அடங்கியுள்ளது.





# தமிழ்,தமிழர்த் திருநாள்

சிந்து நதிப் பிரதேசத்தில் உள்ள அரப்பா - மொகஞ்சாதாரோ என்னும் இடங்களில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்ட கட்ட டங்களையும் பொருள்களையும் நோக்குமிடத்து அவைகள் எல்லாம் 5000 கி.மு-க்குப் பல்லாண்டுகள் முற்பட்டவை என்றும் அவைகள் எல்லாம் தமிழர் நாகரீகத்தை வெளிப்படுத்துகின்றன என்றும், அந்நாகரீகம் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்குப் பலநூறு ஆண்டுகட்கு முன்பே இருந்த நாகரீகம் என்றும், அது கற்காலத்துக்கும் (NEO-LITHIC-AGE செப்புக் காலத்துக்கும் (COPPER AGE) இடைப்பட்ட நாகரீகத்தைக் கொண்டதென்றும், தமிழருக்கே உரித்தான மூக்கு ஆபரணங்களும் தாலி முதலிய கழுத்து ஆபரணங்களும் அக்கட் டடங்களில் காணப்படுகின்றன என்றும் அறிஞர்கள் ஜான் மார்ஷல் என்பவரும், ரெவரெண்டு ஈராஸ் என்னும் பாதிரியாரும் கூறி உள்ளனர்.

தமிழ் மொழியானது முதன் முதல் உருவ எழுத்துக்களையும், பின் கோல் எழுத்துக்களையும், பின் வட்ட எழுத்துக்களையும், பின் சதுர எழுத்துக்களையும் கொண்டு மாறுதல் அடைந்து வந்திருக்கிறது. இஃது ஆராய்ச்சியாளர் கண்ட துணிபு. உருவ எழுத்துக் காலத் திலேதான் தமிழிலிருந்து சீனம், கடாரம், சுமேரியம், பினீசயம், எகுபதியம் முதலிய பல மொழிகள் பிரிந்தன. கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் இருந்து மராட்டியம், வங்கம், கோசலம், பலுச்சியம், ஆரியம், பாலி, பிராகிருதம் முதலிய பல மொழிகள் பிரிந்தன. வட்ட எழுத்துக் காலத்தில் தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்தன. தமிழ்த் தற்காலம் சதுர எழுத்துக்காலம்.

ஆரியர்கள் வடமேற்குக் கால்வாய் வழியாய்த் தமிழ் நாட்டில் நுழைந்தது கோல் எழுத்துக் காலத்தில் ஆகும். அஃதாவது அரப்பா - மொகஞ்ச தாரோ முதலிய தமிழருடைய நகரங்கள் மண்மாரியால் அழிவெய்திய பிற்றைக் காலத்தில் ஆரியர்கள் முதன்முதல் சிந்துநதிப் பிரதேசத்தில் குடியேறி, பிறகு கங்கை பாயும் நாட்டை விந்தியமலை வரை வென்று, ஆரியா வர்த்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆரியா வர்த்தத்துக்கு இந்துஸ்தானம் என்று பெயர். இந்துஸ்தானம் என்ற பெயருக்கு இந்துக்கள் வசிக்கும் இடம்



பொதுமறைச் செம்மல்
மருத்துவ மாமணி
சித்த மருத்துவர
எம்.ஏ.உசைன்
சென்னை

என்பது பொருள். ஆரியருக்கு இந்துக்கள் என்ற பெயர் பாரசீகர்களால் கொடுக்கப்பட்டது. இந்து என்ற பதம் பாரசீக மொழியைச் சேர்ந்தது.

ஆரியர் ஆரியா வர்த்தத்தை நிலைநாட்டிய காலத்தில் பல தமிழ் மன்னர்கள், விஸ்வாமித்திரர் - சனகர் முதலியோர் ஆரிய மதத்தை அனுசரித்துக்கொண்டார்கள். சைவராயிருந்து சமன மதத்துக்குப் போன திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சமணர்கள் தங்களுடைய மதத் தலைமையைக் கொடுத்ததுபோல் தமிழராயிருந்து ஆரிய மதத்தை அனுசரித்த விசுவாமித்திரருக்குப் பிரம்மரிஷிப் பட்டமும் சனகருக்கு ஞானரிஷிப் பட்டமும் ஆரியர்கள் அளித்து, மேலும் பல தமிழர்கள் ஆரிய மதத்தை அனுசரிக்கும் பொருட்டு அவர்களைப் பெருமைப்படுத்தினார்கள். ஆரிய மதத்தை அனுசரிக்காத தமிழ் மன்னர்களும் ஏனைத் தமிழ்ச் சான்றோர்களும் விந்திய மலைத் தெற்கே தக்காணம் என்ற தமிழ் நாட்டின் பகுதிக்குப் பெயர்ந்தது வந்துவிட்டார்கள்.

தக்காணத்திலேதான் தமிழுக்குப்பின் வட்டெழுத்துக் காலம் தொடங்கிற்று. கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் 16 உயிர்களும் 35 மெய்களும் இருந்தது போலவே வட்ட எழுத்துக் காலத்திலும் மேலே சொன்ன 51 எழுத்துக்களே முதலெழுத்தாக இருந்தன. ஆரியா வர்த்தத்தில் கோல் எழுத்துக்களால் வழங்கிய மொழிகளுக்கு வடதமிழ் - வடமொழி என்றும், தக்காணத்தில் வட்டெழுத்துக்களால் வழங்கிய மொழிகளுக்குத் தென்தமிழ் - தென்மொழி என்றும் வழக்குகள் ஏற்பட்டன.

பிறகு பாரத காலத்துக்குச் சற்று முன்பின் தமிழுக்குச் சதுர எழுத்துக் காலம் ஆரம்பம் ஆயிற்று. சதுர எழுத்துக் காலத்திலேதான் தமிழுக்கு 12 உயிர்களும், 18 மெய்களும் ஆக அறிஞர்கள் வகுத்தார்கள். இக்காலத்திலேதான் துவராபதியினின்றும் வந்த உலோபாமுத்திரை அகத்தியர் பேரகத்தியம், சிற்றகத்தியம் என இரண்டு இலக்கண நூல்களை வகுத்தார். பழந்தமிழ் மொழியினின்றும் வேறு பிரிந்து செந்தமிழ் எனத் தமிழ் மொழிக்குப் பெயரிட்டார். தமிழ்மொழி மிகச் சீர்திருந்திய மொழியில் ஃ எனும் ஆய்த எழுத்தைச் சேர்த்து 31 எழுத்துக்களுடன் வழங்கலாயின.

இதே மாதிரி வியாசரும் வடநாட்டில் வழங்கிய மொழிகளில் சில ஆரியம் - பிராகிரும் முதலியவைகளைச் சீர்திருத்திச் சம்ஸ்கிருதம் எனப் பெயர் அமைத்து, சம்ஸ்கிருதத்தில், பல புராணங்களும் இதிகாசங்களும் எழுதினார். ஆனால், அவர் தமிழில் இருந்த கோல் எழுத்துக்களையே கருவியாகக் கொண்டார். அதனாலேயே சம்ஸ்கிருதத்துக்கு வடதமிழ் என்ற பெயரும் அமைந்தது.

தமிழ் மூவாயிரம் தந்த திருமூலர் தான் படைத்த திருமந்திரத்தில் பயன்படுத்தியுள்ள எழுத்துக்களின் பெரும் பகுதி வடதமிழ் ஓசையில் அமைந்துள்ளது. இதனால் சிலர் திருமூலர் கூறியது ஆரிய மொழியின் திரிபாகிய சம்ஸ்கிருதத்தின் எழுத்துக்களையே ஒழிய தமிழ் எழுத்துக்களை அல்ல என்று கூறுவர். அவர்கள் அனைவரும் கூர்ந்து ஆராய வேண்டியது ஒன்று உண்டு. அதாவது

**பின்னை நின்றென்னே பிறவி பெறுவது**
**முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**

தன்னைநன் றாகத் தமிழ் செய்யு மாறே என்று கூறியிருக்கும் அடிகளை நோக்கினால் திருமூலர் பயன்படுத்திய மொழி நேரிடையாக தமிழ்மொழிதான் என்பதை அறியலாம். மேலும் திருமூலரின் பாடல்களின்படி உலகில் எங்கெல்லாம் மனிதர்கள் வாழ்ந்தனரோ அவர்களை அனைவருமே தமிழ் மொழியைத் தான் வழக்கத்தில் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம். அஃதாவது

**தமிழ் மண் டலம் ஐந்தும் தாவிய ஞானம்**
**உமிழ்வது போல உலகம் திரிவார்**
**அவிழு மனமும்எம் மாதி அறிவும்**

தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவமாமே என்று திருமூலர் கூறியுள்ளார். தமிழ் மண்டலம் என்பதற்குச் சிலர் பஞ்ச திராவிட மொழிகளான, தமிழ், தெலுங்கு,



கன்னடம், மலையாளம், மராட்டியம் இவைகளே மண்டலங்கள் என்றும் சிலர் சேர, சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை மண்டலங்கள் என்றும் பொருள் செய்து இடர்ப்படுவர். ஈண்டு மண்டலம் என்று திருமூலர் கூறியது ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களையே ஆகும். மண்டலம் = மண் + தலம் எனப் பிரிக்க அப்பாட்டிலேயே தமிழ்நாட்டுச் சித்தர் குழாஅங்கள் அக்கண்டங்களிலே ஞானம் உமிழ்வது போல் உலகம் திரிவார் என்று கூறி மண்டலம் என்பது உலகம் (கண்டங்கள்) என்று விளக்கியுள்ளார். மத்திய ஆசியாவில் உள்ள காகஸ் மலைத்தொடர் பகுதியில் வாழ்ந்த தமிழ் சித்தர் ஒருவரின் பெயர் காகபுசண்டர் என்பதாகும்.

சுத்த தத்துவத்தினின்று அசுத்த தத்துவமும், அசுத்த தத்துவத்தினின்று பிருகிருதி தத்துவமும் தோன்றுகிறபடியால், சுத்த தத்துவத்திலேயே முத்தமிழ் வேதம் தோன்றியதெனச் சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் என்று திருமூலர் கூறியுள்ளார். இதனாலேயே, அக்காலத்தில் இமயமுதல் குமரிவரை, அங்கம் முதல் காந்தாரம் வரை வழங்கிய 18 மொழிகளும், தமிழிலிருந்தே பிறந்தன என்பது வெள்ளிடைமலை, பதினெண் மொழிகளாவன; சிங்களம், சோனகம், சீனம், சாவகம், கொங்கணம், குடகம், கொல்லம், துளுவம், வங்கம், கடாரம், மகதம், கோசலம், கங்கம், காச்மீரம், கலிங்கம், நேபாளம், அங்கம், காந்தாரம் ஆகிய மொழிகள் தங்கி வளரும் தமிழ் நாடென்ப. என்னும் பாட்டால் அறியலாம். அக்காலத்தில் பண்டிதர்கள் எல்லாம் 18 மொழிகளிலும் வல்லுநராய் இருந்தனர். இதனையே,

**பண்டிதராவர் பதினெட்டுப் பாடையும்**
**கண்டவர்கூறும் கருத்தறிவார் என்க**
**பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்**

அண்ட முதலா அரன் சொன்ன வாறே என்று திருமூலர் பாடியுள்ளார்.

இலங்கையை ஆண்ட ராவணனால் தனது ராணுவ வீரர்களுக்கு தெலுங்கு மொழியிலிருந்து ஒருவிதமான சங்கேத மொழியை உண்டாக்கி வழங்கினான். அந்த மொழிதான் இன்று சிங்களவர்களால் பேசப்படும் சிங்களம் எனும்மொழி.

தமிழ் மொழியை மதுர வாக்யம் (-இனிய மொழி - தமிழ் மொழி) என்றும், அதுதான் மனிதர் மொழி என்றும் வான்மீகர் இராமாயணத்தில் கூறுகிறதாகச் 'செந்தமிழ்' பத்திரிகை ஆசிரியர் கூறுகிறார் (கூஷிவீபீமீ செந்தமிழ் கூஷிஷீரீ.36 ழிஷீ.7) தமிழ் மானுஷ பாஷையென்று பொதுப்படக் கூறப்பட்டமையால், அக்காலத்தில் மானிடர் வாழும் இடம் எங்கும் தேச பாஷையாகத் தமிழ்மொழி நடைபெற்று இருந்ததென்று அறியலாம் எனவும் பத்திரிகையாசிரியர் கூறுகின்றார்.

மேலும் செந்தமிழ் கூஷிஷீரீ.36 ழிஷீ.8-ல் பக்கம் 341-ல் மானிடர்க்கும் பிறப்புரிமையாயுள்ள பாஷை ஒன்று இருக்க வேண்டுமென்றே! அது தமிழ் மொழி என்றும், பின்பு செயற்கையாயுள்ள பாஷை தேவ



பாஷை முதலிய பிறமொழிகள் என்றும் கொள்ளத் தகும் என்றும் கூறுகிறதால் ஐந்து கண்டங்களிலும் உள்ள மானிடர் எல்லோருக்கும் பிறப்புரிமையாயுள்ள மொழி தமிழ்மொழியாகும்.

அரப்பா - மொகஞ்சதாரோ நாகரிகம் எல்லாம் தமிழில் உருவ எழுத்துக் காலமாகும். அக்காலம் கடைசியில் மண்மாரி பெய்து பெரிய நகரங்கள் எல்லாம் அழிந்து, பெரிய மாறுதல் உண்டாயிற்று.

அதன் பிறகு, தமிழில் கோல் எழுத்துக் காலம் ஏற்பட்டது. அக்காலத்திலேதான் ஆரியர் 'சிந்துநதி தீரத்தில் குடி ஏறினார்கள். பிறகு நாளடைவில் தமிழர்க்கும் ஆரியர்க்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. ஆரியர்கள் தமிழர்களை வென்று, தமிழர் நாடு நகரங்களை அழித்து, பல தமிழ் அரசர்களைத் தம் வயப்படுத்தி, எதிர்த்தோரை விந்தியத்திற்கு தெற்கே விரட்டிவிட்டார்கள். ஆரிய மொழிக்கு எழுத்தில்லாததால் தமிழ்க் கோல் எழுத்துக்களை தங்கள் மொழிக்குச் சில மாறுதல்களுடன் நெடுங்கணக்காக வகுத்துக் கொண்டார்கள். சிந்து நதிப் பக்கத்திலும், கங்கை பாயும் நாட்டிலும் தமிழர் நாகரிகம் பாழ்படுத்தப்பட்டது என்பதை ஆரியர்களுடைய இருக் வேதத்தை படிப்பவர் அறியாமல் இரார். ஆரியர்களுக்கு விந்திய மலைக்கு வடக்கே உள்ள நிலங்கள் முழுவதையும் விட்டு விட்டு, தமிழர்கள் தெற்கே தக்காணத்துக்கு வந்து தம் இனத்தவருடன் கலந்து கொண்டார்கள். அக்காலத்திலேதான் தமிழுக்கு வட்டெழுத்துக் காலம் ஆரம்பமாயிற்று. வட்டெழுத்துக் காலக் கடைசியிலேதான் இராமாயண காலம் ஆர்யாவர்த்தத்தை ஏற்படுத்திய பிறகு பல ஆண்டுகள் வரை ஆரியர் தக்கணத்துக்குச் செல்லக் கூடாதன்று தம்முடைய ஒழுக்க நூல்களில் விதித்தும் இருந்தார்கள். ஆபஸ்தம்பர் - போதாயனர் முதலியோர் சூத்திரங்களே இதற்குச் சான்று பகரும்.

அப்படி இருந்தும் சிவப்பு இந்திய வம்சத்தவனாகிய இராவணனைத் தமிழ் நாட்டினின்றும் தொலைக்க,



தமிழ் அரசர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஆரிய அரசனாகிய தசரத இராமனையும் உதவிக்குச் சேர்த்துக்கொண்டு, போரிட்டு வெற்றி கண்டனர். அன்று தொட்டு ஆரிய நாகரிகம் விந்திய மலைக்கு தெற்கே தமிழ் நாட்டில் பரவத் தொடங்கியது. சூத்திரங்களில் விதித்ததற்கு மாறாக ஒரு தடவை எண்ணாயிரம் பேரும் (அஷ்டசகஸ்ரம் என்னும் பிராமண வகுப்பார்), இன்னொரு தடவை ஆறாயிரம் பேரும் (ஆறு வேலு என்ற தெலுங்க நாட்டுப் பிராமண வகுப்பார்), இவர்களுக்கெல்லாம் முன்னாடி வந்தவரும் (பிரகச்சரணர் என்ற பிராமண வகுப்பார்) கூட்டம் கூட்டமாகத் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். ஆரிய மொழிச் சொற்கள் தமிழில் கலக்க ஆரம்பித்தன. ஆரிய மொழிச் சொற்களைக் கலந்து பேசுவதுதான் சிறந்த நாகரிகமானது என்று பல தமிழர் எண்ணினார்கள். இவ்வாறு தனித்துவமாக செம்மைப் படுத்தப்பட்ட செந்தமிழ் காலப்போக்கில் சிதைவுண்டுவிட்டது.

உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் தமிழ் மொழியே கருவானது என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்னுமொன்றை நினைவு கூறுவோம். அதாவது காஞ்சிப்பெரியவருக்கும், திருவருட்பிரகாச வள்ளலாருக்கும் நடந்த ஒரு உரையாடலில் காஞ்சிப் பெரியவர் வள்ளலாரிடம் லோக மானுஷ மாத்ருபாஷை சம்ஸ்கிருதமே என்று கூறினார். அதைக் கேட்ட திருவருட்பிரகாச வள்ளலார் புன்முருவலுடன் உலக மனித சமுதாயத்திற்கு சம்ஸ்கிருதம் தாய் மொழியென்றால் அனைத்துக்கும் தமிழே தந்தை மொழியாம் (தமிழே அனைத்து மொழிகளுக்கும் கருவாகும்) என்று மிக மென்மையாக கூறியதைக் கேட்ட காஞ்சிப் பெரியவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார் என்பது வரலாறு. இப்படியெல்லாம் சிறப்புப்பெற்ற நம் நாட்டினர் தென்தமிழும், வடதமிழும் இருக்க, தமிழ், தமிழ், தமிழ் என்று மூச்சுக்கு 300 முறை கூறும் இன்றைய நம் தமிழர்களில் சிறந்த அறிஞர்கள்கூட, நம் நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரிட்டிஷ்காரர்களின் மொழியாகிய ஆங்கிலத்திற்குக் கொடுக்கும் மதிப்பைக்கூட நம் நாட்டு மொழிக்கு கொடுப்பதில்லை. தமிழுக்கே சிறப்பைத் தரும் எழுத்து ‘ழ’ அப்படிப்பட்ட சிறப்புக்குரிய ‘ழ’ இடம்பெற வேண்டிய சொல்லான பவழம் என்பதைக் குறிக்கும் பவழவிழா என்பதைக் கூட பவள விழா என்று கூறியும் எழுதியும் வருகிறார்கள். மழை என்பதற்கு புயல் என்றும் ஒரு பெயர் உண்டு. ஆனால் சூறாவளி / சுழற்காற்றை புயல் என்று கூறுகின்றனர், எழுதுகின்றனர். சற்றே வருத்தமாகத்தான் உள்ளது. என் செய்ய காலக்கொடுமைகள் பலவற்றில் இதுவும் ஒன்று.

## தமிழர்த் திருநாள்

உலகம் முழுக்க வாழ்ந்த தமிழ், வாழும் தமிழர், அவனுக்கென்று ஒரு திருநாள் அதுதான் தைத்திருநாள். தைத்திருநாள் தான் தமிழனுக்கு புத்தாண்டு, மற்றும் வேளாண் திருநாள். இதைச் சொல்லும் பொழுது தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்ததால் அதை ஏற்று இங்கே குறிப்பிடுவதாகக் கருதவேண்டாம். மனித இனத்திற்கு அத்தியாவசியமானவைகள் மூன்று, உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க இடம். இம்மூன்றும்தான் உலகில் வாழும் அனைத்து மனித இனத்திற்கும் அத்தியாவசியத் தேவைகள். இந்த மூன்றும் வேளாண் என்னும் பயிர்த் தொழிலின் மூலம்தான் கிட்டும். இத்தொழிலை உலக நாடுகளுக்குச் சொல்லிக் கொடுத்தவன் தமிழன். தமிழனுக்கு புத்தாண்டு சித்திரைத் திங்கள் முதல் நாளென்று அநேகமான தமிழர்கள் கொண்டாடுகின்றனர். சித்திரை என்பது தமிழ் அல்ல சைத்ரா என்கின்ற வடமொழியின் திரிபே. சமயம், மதம், ஜாதி, மொழி இவைகளால் வேறுபட்ட மனித சமுதாயம் அனைத்திற்கும்தான் வேளாண் தொழில் பொது அப்படி இருக்க உலகில் பெரிய சமயங்களைச் சார்ந்தவர்களான இஸ்லாமியர்களும், கிருஸ்தவர்களும் வேளாண் திருநாள் என்பது வேறு யாருக்கோ உரியது என்றும் தமது சமயத்திற்கு நேர் விரோதமானது என்றும் எண்ணி அந்த நன்நாளினையே புறக்கணித்து மறந்து வாழ்கின்றனர். இந்த உண்மையை எல்லோரும் சிந்தித்து உணரவேண்டும். சூரியனை இறைவனாகக் கற்பித்தவர்கள், சூரியனை இறைவனாக ஏற்று வழிபடுபவர்கள், அவர்கள் செய்யும் சடங்குகள் இவைகளை ஏற்றுத் தான் வேளாண் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்பது யாருக்கும் கட்டாயமில்லை. அவரவர் சார்ந்த சமய கொள்கையினின்றும் மாறாமல் எல்லோரும் அத்திருநாளைக் கொண்டாடலாமே.

உலக நாடுகளில் வாழும் தமிழர்களெல்லாம் தமிழனின் பாரம்பர்ய விழாவான பொங்கல் திருநாளை சி



றப்பாகக் கொண்டாடுவதில்லை. உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் எல்லோரும் பொங்கல் திருநாளை கொண்டாடுகின்றார்களோ இல்லையோ தீபாவளித் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தீபாவளித் திருநாள் சமண சமயத்தவர்களுக்கு உரியது. சமண சமயத்தைச் சாராத வேறு எந்தச் சமயத்தவர்க்கும் தீபாவளித் திருநாள் உரியதன்று.

நரகாசுரன் என்னும் அசுரனை கிருஷ்ண பரமாத்மா இரவு 12 மணிக்கு வதம் செய்தார். கொடிய அசுரன் வதம் செய்யப்பட்டதால் மனிதர்களுக்கு நிம்மதி கிடைத்தது. அந்த நிம்மதியை கொண்டாட பட்டாசு வெடித்து, புத்தாடை உடுத்து, இனிப்பு பலகாரங்கள் செய்து உண்டு சந்தோஷமாக கொண்டாடுவதாக கூறப்படுகிறது. இதையே சடங்காக வைத்து புதுமணத் தம்பதியருக்கு தலைத் தீபாவளி என்று கூறி அதை ஒரு வழக்கமாக்கிக் கொண்டனர். மாலையில் சூரியன் அஸ்தமனம் (மறைந்தால்) ஆனால் ஒரு முறை சங்கு ஊதி போர் நிறுத்தம் செய்வர். மறுநாள் காலையில் மீண்டும் போர் தொடங்கும். இதுதான் நம் நாட்டின் போர் இலக்கணம். அப்படியானால் இரவில் போரே நடந்திருக்காதே, போரே நடந்திருக்க முடியாது என்றால் இரவில் அசுரனை எவ்வாறு வதம் செய்திருக்க முடியும் சற்றே சிந்தித்தால் உண்மை விளங்கும். அப்படியானால் தீபாவளித் திருநாள் எப்படி உண்டாயிற்று. இத்திருநாளுக்கும் சமண சமய சகோதரர்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்று ஆராய்வோமானால் அதற்கான விடை கிடைக்கும்.

அதாவது சமண சமயத்தை வளர்த்த தீர்த்தங்கர்களில் கடைசியாக வந்தவர் வர்தமான மகாவீரர். அவர்தான் எந்த உயிர்க்கும் தீங்கிழைக்கக் கூடாது, மக்கள் ஒற்றுமையுடனும், ஒழுக்கமுடனும், தர்மசிந்தனையுடனும் வாழ வேண்டும் என்று தன் சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு உபதேசித்து வந்தார். அவ்வாறு உபதேசித்து வரும் வேளையில் ஒருநாள் அவர் உபதேசம் செய்துக் கொண்டே இருந்து சோர்வுற்று தான் அமர்ந்திருந்த இருக்கையில் சாய்ந்து விட்டார். பொதுமக்கள் அவர் உறங்கிவிட்டார் என நினைத்தனர். மீண்டும் விழித்து மறுபடியும் தனது உபதேசத்தைத் தொடர்வார் என்று நம்பி காத்திருந்தனர். நீண்ட நேரம் ஆகியும் அவர் விழித்தெழாததைக் கண்ட மக்கள் அவரை தொட்டு எழுப்ப முயற்சித்தபோது அவர் உறங்கவில்லை, அவர் உடலிலிருந்து ஆத்மா பிரிந்துவிட்டது என்பதை உணர்ந்தனர்.

ஆயினும் அந்த மக்கள் வர்தமான மகாவீரர் இதுவரை ஒரு உடலுக்குள் இருந்து நம்மை காத்து வந்தார், இனி தீபஒளியாகி நம் எல்லோர் உள்ளத்திலும் அமர்ந்து நம்மை வழிநடத்துவார் என்று கூறி ஒரு தீபத்தை ஏற்றிவைத்து அதனுள் அவரை நினைத்து வணங்கினர். அந்த நாளை தீபஒளி நன்நாளாக ஏற்று இன்றும் அந்த நாளில் குளித்து, புத்தாடை உடுத்தி, புதுக்கணக்கு தொடங்கி இனிப்புகள் செய்து உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் வழங்கி மகிழ்ச்சியாக கொண்டாடி வருகின்றனர். இந்த வழக்கம் 2100 ஆண்டுகளுக்கு முன் வடக்கிலிருந்து தென்புலம் நோக்கி வந்து இன்று நம் தமிழ்நாட்டில் உள்ள வந்தவாசி எனும் ஊரில் உள்ள மலைப்பகுதியில் குடியமர்ந்து அங்குள்ள மக்களை நல்வழிப்படுத்தி அதன்மூலம் இங்கிருந்த பல சமயத்தைச் சார்ந்த மக்களையும் சமண சமயத்தில் இணைத்து அவர்கள் மூலம் சமண சமைய வழிபாடுகளை பரப்பிவந்தார். அவர் மூலம் தமிழகத்தில்



சமண சமயத்தை ஏற்று அவருடைய பயிற்சியின் மூலம் வாழ்க்கையை நடத்துபவர்களை இன்று நயினார்கள் என்று அழைப்பர். அந்த சமண சமயப் பெரியாரின் பெயர் குந்து குந்தர் என்பதாகும்.

வந்தவாசியில் அவர் இருந்த இடத்தை குந்து குந்தர் மலை என்றும், அங்கு உருவாகிய நகருக்கு குந்து குந்தர் நகர் என்றும் பெயரிட்டு அங்கே ஒரு ஆஸ்ரமம் அமைத்து ஆண்டு தோறும் அங்கே சிறப்பான விழாக்கள் நடைபெற்று வருகிறது. அந்த குந்துகுந்தர் என்கின்ற சமண சமயப் பெரியார் மூலம்தான் சமண சமய கொள்கைகள் நம் நாட்டில் பரவியது. அதில்

ஒன்றுதான் தீபஒளித் திருநாள். இந்த உண்மையை நம் தமிழகத்தில் இன்று நகை அடகு கடைவைத்து தொழில் செய்து வாழ்ந்து வரும் சமண அன்பர்களிடம் இதைப்பற்றிக் கேட்டு மேலும் விளக்கங்களைத் தெரிந்துக் கொள்ளலாம். ஆக சமண சமயத்தைச் சார்ந்த அன்பர்கள் நமது நாட்டுச் சகோதரர்கள் அவர்கள் கொண்டாடும் தீபஒளித் திருநாளை நாமும் கொண்டாடலாம். எந்த சடங்கு சம்பிரதாயமும் இன்றி மூடநம்பிக்கைகளுக்கு இடம் தராமல், நாமும் இனிப்புகள் உண்டு மற்றவர்களுக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடுவோம். இந்த உண்மையை அறிந்து அதன்படி இந்த நாளைக் கொண்டாடினால் நம்மோடு நம் ஊரில் வாழும் சமண சமய சகோதரர்கள் மகிழ்ச்சி அடைவர். அந்த மக்கள் மார்வார் எனும் ஊரிலிருந்து தான் தொழில் நடத்தும் நோக்கோடு நம்மூர்களில் குடிவந்தனர். வட மாநிலத்தில் உள்ள மார்வார் எனும் நகரத்திலிருந்து அவர்கள் வந்தவர்கள் என்பதால் அவர்களை மார்வாரிகள் என்று அழைக்கப்பட்டனர். அந்தச் சொல் மருவி மார்வாடி என்றாகிவிட்டது.

ஆக தமிழனுக்கென்று இன்று மாதந்தோறும் கொண்டாடப்படும், சித்திரைத் திருநாள், வைகாசி விசகத் திருநாள், ஆனித் திருமஞ்சனம், ஆடி அமாவாசை, ஆவணி அவிட்டம், புரட்டாசி விரதம், ஐப்பசி தீபாவளி, கார்த்திகை தீபம், மார்கழி வைகுண்ட ஏகாதசி, தை மகர சங்கராந்தி, மாசி மகம், பங்குனி உத்தரம் மற்றும் மாதந் தோறும் பல திருநாட்கள் இப்படி உள்ள அனைத்தும் தமிழனுக்குத் தரப்பட்ட திருநாட்கள். ஆனால் மனித சமுதாயத்திற்கு அத்தியாவசியமான தேவைகளான உணவு, உடை, இடம் இவை மூன்றும் வேளாண்தொழில் மூலமே நிறைவேற்றப்படுகிறது. அந்த வேளாண் தொழிலை உலகத்திற்கே கற்றுத் தந்தவன் தமிழன் என்பதால் அந்த மகிழ்ச்சியை கொண்டாடும் ஒரே விழா தமிழனுக்கு பொங்கல் (வேளாண்) திருவிழா ஒன்றுதான் என்பதை உணர்த்தி சமயம், மதம், ஜாதி இவைகளெல்லாம் கடந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இந்த வேளாண் விழாவினை கொண்டாட அருள்தர வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி அமைகின்றேன்.



# மாண்புறு கல்விப் பணியாளர் திரு.க.தியாகராஜா அவர்களின் சேவைகளை நினைவு கொள்வோம்

**கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொடர் நினைவுப் பேருரைகளின் வரிசையில் முதலாவது நினைவுப் பேருரையானது...**

**வடக்குகிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார, காணி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளரும், வடக்குகிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்னாள் மாகாண கல்விப் பணிப் பாளரும், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான காலஞ்சென்ற அமரர் க.தியாகராஜா அவர்களின் "தியாகராஜா அரங்கு" ஞாபகார்த்த நினைவுப் பேருரையானது ஞாயிற்றுக்கிழமை (23 02 2020) மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடை பெற்றது.**

**இற் நிகழ்வின் சிறப்பு மலருக்காக கனடாவிலிருந்து பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்களின் கட்டுரை :**



**சு**வாமிவிபுலாநந்தரின் புகழ்பாடும் கிழக்கிலங்கையில்,அவர் வழியில் கல்விப்பணிஆற்றிமக்களின் மனத்திலேதடம்பதித்தபெருமைஎங்கள் ஆசிரியர் கல்வியாளர் திருவாளர் க. தியாகராஜா அவர்களையேசாரும். அவரதுசேவைகளைப் பாராட்டி,அவரது 85ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் வெளியிடப்படும் 'தியாகராஜம்'என்னும் நினைவுமலருக்குநானும் ஒருகட்டுரைஎழுதுவதில் மிக்கமகிழ்ச்சியடைவதோடு,விழாக் குழுவினரையும் பாராட்டுகின்றேன்.

1965 செப்ரெம்பர் மாதம் முதல் அதிபர் க. தியாகராஜா அவர்களின் இறுதிக்காலம்வரைஎன்ஆசிரியரைநன்கறிவேன். அவரதுவகுப்புமாணவராக,குடும்பநண்பராக,மட்டக்களப்புப் பிரதேசக் கல்விவளர்ச்சியில் அக்கறைகொண்டவராகஅவருடன் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. சிவானந்தாவித்தியாலயத்தில் அவர் உயர்தரவகுப்புமாணவர்களுக்குவரலாறு,அரசியல் விஞ்ஞானம் ஆகியபாடங்களைக் கற்பித்தார்.அப்போதுஎங்கள் ஆசிரியர்களாக

**பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி**
**தமிழ்த்துறைத் தலைவர்**
**அண்ணாமலை கனடா வளாகம்.**
**றொறன்ரோ.**




க. தியாகராஜா,பண்டிதர் வி. சீ. கந்தையா,வித்யா சிரோன்;மணிபூரணதியாகராஜாக்குருக்கள் ஆகிய மூவரும் எமக்குக்கற்பித்துப் பல்கலைக்கழகஅனுமதி பெறுவதற்குஉதவியகுருமார்களாவர். எனதுவகுப்பிற் பயின்றவர்களிற்சி. புண்ணியமூர்த்தி, இராதாகிருஷ்ணன்,காத்தான்குடி இஸ்மாயில் ஆகியோரைஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். இராதாகிருஷ்ணனுடன் எங்கள் ஆசிரியரின் இல்லம் செல்வேன். கல்லூரி விடுதியில் தங்கியிருந்தஎனக்குஅவரதுவீட்டுஉபசரிப்புமகி;ழ்ச்சியைத்தந்தது.ஈழத்தமிழரின் வரலாற்றுச் சிந்தனையைஎனக்குஊட்டியவர் தியாகராஜா அவர்களேஆவார்.

தியாகராஜா அவர்கள் பேராதனைப் பல்கழகத்தில் னுடிணீடழஅய டிண நுனரஉயவழைபெட்டப் படிப்புக்காகவந்திருந்தபோது,நான் தமிழ்த்துறைவிரிவுரையாளராக இருந்தேன். அப்போதுஅவர் என்னைவாழ்த்தியதும், கூறியஅறிவுரைகளுமேஎன்னை உயர்நிலைக்குவழிநடத்தினஎன்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். 1984ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றியபோதுஅவரது மூத்தமகள் பவானிஅங்கே நுண்கலைப்பீடமாணவியாகவந்திருந்தார். தந்தையும் மகளும் எம் இல்லம் வந்தமை இன்றும் பசுமையானநினைவுகளாகஉள்ளன.

1992இல் பிரித்தானியபொதுநலவாயநாடுகளின் சிரேஷ்ட புலமைப்பரிசில் பெற்றுசெவ்வீல்ட்; பல்கலைக்கழகம் சென்றேன்.அதன் பின்னர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்துவந்ததும,; தாயகஉணர்வுகளுடன் செயற்படத் தொடங்கினேன்.சுவாமிவிபுலாநந்தர்மீதுஈடுபாடுள்ளவர்களாகக் கனடாவில் வாழ்ந்தவர்களையும்,சிவானந்தா வித்தியாலயப்பழையமாணவர்களையும் இணைத்து 2003இல் 'சுவாமிவி;பலாநந்தர்கலைமன்றம்கனடா' என்றஅமைப்பைஉருவாக்கினோம். அதன் தலைவா



ராகஎன்னைநியமித்தார்கள். முதலாவதுஆண்டுவிழாமிகப் பிரமாண்டமானமுறையில் நடத்தப்பட்டது. அப்போதுவடக்குக் கிழக்குமாகாண,அம்பாறை மட்டக்களப்புமாவட்டசபைஆணையாளராகஎங்கள் ஆசிரியர் பணியாற்றிக் கொண்டிருந்தார்.சுவாமி விபுலாநந்தர் வழியில்,அரசஅதிகாரியாகக்கல்விச்சேவைஆற்றிக்கொண்டிருந்தஎங்கள் ஆசிரியரைஅப்பெருவிழாவுக்குமுதன்மைவிருந்தினராகஅழைப்பதுஎனத் தீர்மானித்து,அதிபர் தியாகராஜா அவர்களைஅழைத்துக் கௌரவப்படுத்தினோம்.

அவர் மட்டக்களப்புக்கல்விப்பிராந்தியத்தில் ஆற்றிவரும் அளப்பெரியகல்விச் சேவைகளைப் பாராட்டுவதாகவேஅவரதுவருகைஅமைந்தது. அதன் மூலம் எங்கள் கலைமன்றமும் பெருமைபெற்றது. அவ்விழாவில் முதன்மைவிருந்தினராகஅவர் ஆற்றியசிறப்புரை,'சுவாமிவிபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்'பற்றியதாகவியக்கத்தக்கவகையில் அமைந்திருந்தது. அத்துடன் விழாவில் வெளியிடப்பட்ட'விபுலம்'என்றசிறப்பிதழில் அவர் எழுதிய'சுவாமிவிபுலாநந்தரின் சமூகப் பணி'என்றகட்டுரையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமிவிபுலாந்தருக்குப் பின்னர் மட்டக்களப்பிற் சிறந்தகல்விமான்களாகத்திகழ்ந்தவர்களில்அதிபர் க. கணபதிப்பிள்ளை. அதிபர் வி. சீ. குந்தையா. அதிபர் க. தியாகராஜா முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களிற் கல்வித்துறையிலும்,நிருவாகத்துறையிலும்; உயர் பதவியும் அதிகாரமும் பெற்றிருந்தவர் தியாகராஜா அவர்களேஆவார்.அவர் பிராந்தியகல்விச்சேவைஆணையாளராகப் பணியாற்றியகாலத்தில் எமதுமக்களுக்குப் பிரதேசஉணர்வோடு,வழங்கியசேவைகள் மிகப் பெரியனஎன்பதைமக்கள் நன்கறிவர். வடக்குக் கிழக்குமாகாணகல்விஅமைச்சின் செயலாளர் பதவியைமக்களதுசேவைக்காகநன்குபயன்படுத்தியவர். அவர் மட்டக்களப்புமாநகரசபையின் முதல்வராகக் கடமையாற்றியகாலப்பகுதியில் மாநகரசபைபலமுன்னேற்றங்களைப் பெறுவதாயிற்று.

சுணீவானந்தாவித்தியாலயத்தில் மாணவராகவோ அல்லதுஆசிரியராகவோகாலடிஎடுத்துவைத்தவர்கள் எப்போதும் சமூகநோக்கும்,பொதுநலப்பணிகளில் ஈடுபாடும் உடையவர்களாகத் திகழ்வார்கள் என்

பதற்குச் சான்றாகத் தியாகராஜா அவர்கள் திகழ்ந்தார்கள். சுவாமிவிபுலாநந்தர் எதிர்காலச் சந்ததியினருக்கு இட்டுச் சென்றஎழுத்துச் செல்வங்களைத் திரட்டித் தொகுக்கவேண்டும் என்றசிந்தனையுடன் மட்டக்களப்புசுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச் சபை’ அமைக்கப்பட்டது. அப்போதுவடக்கு-கிழக்குமாகாணகல்வித்துறைச் செயலாளராகத் திகழ்ந்த க. தியாகராஜா அவர்கள் இச்சபைக்குத் தலைவராகச் செயற்பட்டார். சுவாமிகளின் ஆக்கங்கள்அனைத்தையும் தேடித் தொகுக்கும் பணிக்குப் பல்வேறுவழிகளிலும் உதவிசெய்து,அவற்றைநான்குதொகுதிகளாகவெளிக் கொணரும் பணியிலும் தியாகராஜா அவர்கள் பெரும் சேவையாற்;றியுள்ளார்.

ஒருபிரதேசத்தின் பன்முகவளர்ச்சியின் அடித்தளமாகஅமைவதுஅங்குஅமைந்துள்ளபல்கலைக்கழகமாகும் என்பதைநன்குணர்ந்தகல்;விமானாகியஆசிரியர் தியாகராஜா அவர்கள் கிழக்குப் பழ்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அதிகஅக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தார். அவரதுகல்வித் தகைமைகளும் வகித்தபதவிகளும் அவரைக் கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவைஉறுப்பினராக்கின. அதன் பயனாகப் அப்பல்கலைக்கழகம் அடைந்தநன்மைகளோபலப்பல. இவற்றிற் குறிப்பாக கல்லடிஉப்போடையில் இயங்கியசுவாமிவிபுலாநந்த இசைநடனக் கல்லூரியைக்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைத்துஅத்துறைபல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக இயங்குவதற்குஉழைத்தவர்களில் தியாகராஜா ஐயாஅவர்களின் பங்களிப்பும்முக்கியமானது.

ஆசிரியர்,அதிபர்,மாநகரமுதல்வர்,வடக்குக் கிழக்குமாகாண,அம்பாறை மட்டக்களப்புமாவட்டசபை ஆணையாளர்,கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்,மட்டக்களப்புசுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச் சபைத் தலைவர்எனப் பல்வேறு தளங்களிற் கல்வி,சமூகம்,பண்பாடு,தமிழ்மொழிஎனப் பன்முகச் சேவைகள் ஆற்றிச் சாதனைகள் படைத்த ஒருசெயல் வீரனாகவாழ்ந்தஆசிரியர் க. தியாகராஜா அவர்கள்எங்களுக்கு ஓர் அரியவழிகாட்டிஆவார்.

தந்தையின் நினைவாகஅவரதுமகள் நாட்டியகலைமணி,திருமதிபவானிகுகப்பிரியா,‘திடகராஜர் கலைக்கோவில்’என்றபெயரில் நடனக் கல்லூரியைக் கொழும்பில் அமைத்துஆயிரத்திற்கும் மேற்பட்டமாணவருக்குநடனக்கலையைக் கற்பித்துவருகின்றார். ‘தேசபந்துவிருது’,‘கலைச் சுடர் விருது’,‘கலைச்சரஸ்வதிவிருது’என்பனவும் பெற்றுள்ளார். அத்துடன் தியாகராஜர் கலைக்கோவில் மாணவர்கள் ஐரோப்பா,தமிழகம் ஆகிய இடங்களிலும் தமதுநாட்டியநிகழ்வுகளின் மூலம் தியாகராஜா அவர்களின் நாமத்தைப் பரப்பியுள்ளார்கள்.இவைமகள் தந்தைக்குஆற்றும் பணிகளாகும்.

முனைவர் பால. சுகுமார் ‘தியாகராஜம்’என்றசிறப்பிதழைவெளியிடும் முயற்சியும் இவ்வகையிற் பாராட்டத்தக்கதாகும். மேலும் அதிபர் தியாகராஜா அவர்களின் பன்முகசேவைகளைப் பாராட்டும் வகையில் அவர் நினைவாக இலங்கைஅரசுதபால்தலை (முத்திரை) வெளியிடுவதற்குரியமுயற்சிகளையும் மேற்கொள்ளுதல் நன்றே. கிழக்கிலங்கையிற் கல்வித் துறையிலும்,சமூகப் பணியிலும் மாண்புறுசேவைகளாற்றியகல்வியாளர் திரு க.தியாகராஜாஅவர்களுக்குக்கிழக்குப் பல்கலைக்கழகம் உரியமதிப்பைவழங்கும் எனஎதிர்பார்கின்றோம்.

**ஆசிரியர் தியாகராஜா அவர்களின் புகழ்**
**அவர் சேவைகளின்வழிநிலைபெறுக.**

# அனைத்து மக்களுக்கும்
# தென்கயிலை ஆதீனம் முதற்குரு தவத்திரு. அகத்தியர் அடிகளாரின் வேண்டுகோள்

**பரம்பொருள் காத்து நிற்கும் பிள்ளைகளே !**

அன்பு வணக்கம்.

இன்று உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ், இலங்கையிலும் சாவுப் பீதியை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இலங்கை அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அது மட்டுமல்லாது பொது சமூக நிறுவனங்களும், சைவ நிறுவனங்களும், ஆலயங்களும் பல முன்னேற்றகரமான வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி, மனத குலத்திற்கு வலுச்சேர்த்து வருகிறார்கள்.

இந்த கொரோனா வைரஸ்ன் தாக்கத்திலிருந்து விடுதலை பெறுவது வெறும் மருத்துவத்தால் மட்டும் நடைபெறாது. அதற்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும். போராட்டம் என்பது, நமக்கு நாமே புரிந்துணர்வும் கட்டுப்பாட்டுடனும் மேற்கொள்ளும் பாது காப்பு நடவடிக்கைகளே. வீட்டை விட்டு வெளியேறாமல்.... வீட்டில் இருந்தபடியே நாளாந்த வேலைகளை கவனித்துக் கொள்ளுங்கள். கோயில்களுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தபடியே நமச்சிவாயப் பதிகத்தையும், திருமுறைகளையும் பாராயணம் செய்து அனைத்து மானிடத்திற்குமாக வேண்டுதலைச் செய்யுங்கள்.

அதே வேளை, சமூக வலைத்தலங்களில் பரவும் செய்திகளுக்கு முக்கித்துவம் கொடுத்து மனங்களை வேதனைப்படுத்தி சிந்தனையை அலைக்களிக்காமல், மன உறுதியோடும், நம்பிக்கை யோடும் இருந்து கொண்டு உங்கள் பிள்ளைச் செல்வங்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள். அன்பான உறவுகளுடன் ஆறதல் கூறி கதைத்துக்கொள்ளுங்கள். விரைவில் இந்த உலகத்தை விட்டு கொரோனா என்னும் அரக்கன் இறைவன் அருளால் விரட்டியடிக்கப்படுவான். அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செலுத்துவோம். ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருப்போம்.

**அன்பே சிவம்**



**தென்கயிலை ஆதீனம் முதற்குரு. தவத்திரு. அகத்தியர் அடிகளார்**



# சைவசித்தாந்தம் கற்றதும் பெற்றதும்

பாகம்: 1

**சைவசமயம் உள்ளத்தை உள்ளபடி உணர்ந்து பாருக்கு அளித்த அரிய ஞானம் சைவசித்தாந்தமாகும்.**

Saivism is the oldest prehistorian religion of South India, essentially existing from pre-Aryan times - Dr.G.U.Pope

The Saiva Philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrisically valuable of all religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion. - Dr.G.U. Pope

In real truth, Saiva siddhanta has something to offer which is suited to all minds. its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies - Sir Monier William

Saiva Siddhanta attempts to comprehend the universe as a sum total of 36 categories. this exposition is purely a logical account on Scientific principles - Thaos Bernard

*இப்படிப்பட்ட சைவசித்தாந்தம் இன்று இந்துமதம் என்னும் பெயரில் சங்கரரின் அத்வைத்தாலும் ஏனைய அந்நிய மதபோதனைகளாலும், அரசியல்நாத்தீகவாதங்களாலும் மறைக்கப்பட்டு வருகின்றமை தென்னாட்டின் ஊழ்வினையின் விளைவே! தமிழ்நாட்டில் பள்ளிசெல்லும் மாணவர்களுடன் உரையாடியபோதுதான் சைவ நாயன்மார்களையே நான் கலந்துரையாடிவர்களில் எவரும்*



**வைத்தியக் கலாநிதி**
**சிவஸ்ரீசான பிரதாபன் தேசிகர்**
**தலைவர் இலங்கை சைவநெறிக் கழகம்**

அறிந்திலர் என்பதை உணர்ந்தேன். ஈழவளநாட்டில் இந்தக்குறை இல்லை! அரசுப பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சைவப் பிள்ளைகளுக்கு சைவசமயத்தை சமயப்பாடமாக கற்பிப்பதால் சைவசமயத்தைப்பற்றிய தெளிவு காணப்படுகின்றது. தமிழகத்தில் இக்குறையைப் போக்க, சைவாதீனங்கள் தமது பணிகளை இன்னும் வீரியமாக்க வேண்டும்.


இன்று பக்தி,சக்தி,ஆன்மீகம், இராமகிருஷ்ண விஜயம் என்று வெளியாகின்ற இதழ்களூடாகவே சமயம் பரப்பப்படுகின்றது. அவையும் சங்கரரின் அத்வைதத்தையே பெரிதும் புகட்டுகின்றது. இதன் தாக்கத்தை இந்துமதம் என்னும் போர்வையில் சுமார்த்த அத்வைதம் போதிக்கபடுவதன் விளைவை, சிவபூமி என்று திருமூலர் சுட்டிய இலங்கையிலும் காணக்கூடியதாகவுள்ளது. எனவே சைவசமயம் பற்றிய தெளிவை ஏற்படுத்தவேண்டியது சைவ சான்றோரின் கடமையாகும்.

இந்துமதம் என்றபதத்தினூடாக இன்று சைவசித்தாந்தம் மழுக்கடிக்கப்படுகின்றதென்பதை சைவர் யாவரும் முதலில் உணரவேண்டும். இரண்டாவது; சைவசித்தாந்தம் பற்றிய தெளிவு சைவர் யாவருக்கும் இருத்தல் வேண்டும்.எனவே; சைவசித்தாந்தம் பற்றிய தெளிவை சைவர் யாவரும் பெறவேண்டும் என்ற நோக்கில் தொடராக "கற்றதும் பெற்றதும்" என்ற தலைப்பில் தருகின்றேன். அதன் பொருள்; யாம் நூல்களைத் தேடிக் கற்றது. நாடிச் சான்றோரிடமிருந்து பெற்றது.

இத்தொடரில் சைவசித்தாந்தத்தின் முப்பொருள் உண்மையை எளிமையான முறையிலும் சுருக்கமான முறையிலும் தரவிரும்புகிறேன். பயப்படாதீர்கள்......... சின்னத்திரை நாடகங்கள்போல் நீட்சியாக நீளாது இத்தொடர்.

சரி; சைவசித்தாந்தம் பற்றி பார்ப்போம்.

சைவசித்தாந்தத்துக்கு பொதுநூலாக நான்மறையும் சிறப்புநூலாக சிவாகமங்களும் விளங்குகின்




றன. சைவசித்தாந்தம் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களால் விளக்கப்படுகின்றது. இந்நூல்கள் சைவசித்தாந்தத்தின் சாத்திரநூல்கள் எனப்படும். பன்னிரு திருமுறைகள் சைவசித்தாந்தத்தின் தோத்திர நூல்கள் எனப்படும்.

சைவசித்தாந்தம் பதி (இறைவன்), பசு(உயிர்கள்),பாசம் எனும் முப்பொருள் உண்மையை தெளிவாக விளக்குவது சைவசித்தாந்த




மாகும். சைவசித்தாந்தம் என்பது வேதாகமங்களின் தெளிவு. சித்தனையின் முடிந்த முடிவு.

வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றாம் சிவப்பிரகாசம் (சைவசித்தாந்தநூல்)

பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப்


பதி பசு பாசம் தெரிதல் சிவப்பிரகாசம் (சைவசித்தாந்தநூல்)

சைவசித்தாந்தத்தை சிவபெருமான் திருநந்திதேவருக்கு உபதேசித்து அருளினார். திருநந்திதேவரிடம் இருந்து சனற்குமாரர் உபதேசம் பெற்றார். சனற்குமாரரிடம் இருந்து சத்தியஞானதரிசினி உபதேசம் பெற்றார். சத்தியஞானதரிசினியிடம் பரஞ்சோதி முனிவர் உபதேசம் பெற்றார்.

பரஞ்சோதி முனிவர் ஒருமுறை அகத்தியரைக் காண்பதற்காக, ஒளியை விமானமாக்கி வான்வழியாக பொதிகைமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது திருவெண்ணெய் நல்லூரில் அவரது விமானம் திடீரென நின்றுவிட்டது. அங்கு சுவேதவனப் பெருமான் என்னும் சிவஞானம் பெருகியிருந்த குழந்தையைக் கண்டார். அக்குழந்தைக்கு மெய்யுணர்வு அருளி மெய்கண்டார் என்று பெயரிட்டார். பரஞ்சோதி முனிவரின் குருநாதராகிய சத்தியஞானதரிசினியின் பெயரையே சுவேதவனப் பெருமானுக்கும் இட்டார். அதாவது சத்தியம் மெய், ஞானதரிசினி கண்டார் என்று பொருள்படும்.

மெய்கண்டார் தமது தந்தையாரின் குலகுருவாக விளங்கிய அருள்நந்திசிவாச்சாரியாரை தனது சீடராக; தலை மாணக்கராக ஆட்கொண்டார்.அருணந்தி சிவாச்சாரியாரிடம் மறைஞான சம்பந்தர்





உபதேசம் பெற்றார். மறைஞான சம்பந்தரிடம் உமாபதி சிவாச்சாரியார் உபதேசம் பெற்றார்.

இங்கு திருநந்திதேவர்,சனற்குமாரர்,சத்தியஞானதரிசினி,பரஞ்சோதி முனிவர் ஆகிய நால்வரும் அகச்சந்தானகுரவர் என்று போற்றப்படுவர். மெய்கண்டார்,அருணநந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர் புறச்சந்தானகுரவர் எனப்போற்றப்படுவர்.

சைவசித்தாந்த சந்தானகுரவரின் வாழ்க்கையை விரிவாக வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். தற்போது, சைவசித்தாந்தத்தின் முப்பொருள் உண்மையை உணர்ந்து கொள்வதற்கு, சந்தானகுரவர் பற்றிய இத்தரவு போதுமானதாகும்.

சைவசித்தாந்த தொடரில் அடுத்து நாம் பார்க்க இருப்பது பதியாகிய சிவபெருமானின் இயல்புகளைப் பற்றியாகும். சிவபெருமான் உருவம்,அருவுருவம்,அருவம் ஆகிய மூன்றுதன்மைகளையும் கடந்த இயல்புக்குரியவர். அதுவென்ன அருவத்தையும் கடந்த இறைவனின் இயல்பு? கடவுளுக்குச் சொல்லப்பட்ட மிகச்சிறந்த இலக்கணம் சைவசித்தாந்தம் கண்ட இலக்கணமே!

இறைவனுக்கு உருவமுண்டு;ஆனால் அந்த இறைவனை யாரும் பார்க்கவில்லை என்பதால் மனிதர் தமது விருப்பத்துக்கு அமைவாக உருவம் வரையக்கூடாது என்கின்றது ஏனைய சமயங்கள். அதே நேரத்தில்; இதுதான் அந்தக்கடவுளின் பெயரென்று ஏதேனும் ஒரு பெயரைத் திட்டவட்டமாக கூறுகின்றன. பெயருள்ள பொருளுக்கு வடிவம் இருக்கும் என்பது வெளிப்படை உண்மை. இதனால் உருவ வழிபாட்டை நிந்திக்கின்ற சமயங்கள் கூட, விஞ்ஞானத்தத்துவ ரீதியில் பூச்சியமாகிவிடுகின்றன. ஆனால் சைவசித்தாந்தம் அருமையான விளக்கத்தை இறைவனுக்கு அளித்து விஞ்ஞானத்தை விஞ்சிய மெய்ஞ்ஞானமாக விளங்குகின்றது.

அப்படியென்ன அருமையான விளக்கத்தை சைவசித்தாந்தம் அளிக்கின்றது?

சிவபெருமானுக்கு சொரூப இயல்பு,தடத்த இயல்பு என்னும் இருவகையான இயல்புகளுண்டு என்கின்றது சைவசித்தாந்தம்.

அதுவென்ன இறைவனின் சொரூப இயல்பு? சரி; சிவபெருமானின் சொரூப இயல்பைப் பார்ப்போம்.

சைவசித்தாந்தம் இறைவனுக்கு கண்ட அருமையான இலக்கணமே இறைவனின் சொரூப இயல்பு. இறைவனின் சொரூப இயல்பை சிறப்பியல்பு அல்லது இயற்கைத் தன்மை என்றும் அழைப்பர்.

பதியாகிய சிவபெருமான் அருவம்,அருவுருவம்,உருவம் என்னும் மூன்றுவகையான தன்மைகளையும் கடந்தவர். உவமைகள் கொண்டு அளக்கப்படக்கூடியவர் அல்லர். யாவற்றுக்கும் அப்பாற்பட்டவர். யாவற்றுக்குள்ளும் இருப்பவர். தூணிலும் இருப்பவர். துரும்பிலும் இருப்பவர். எங்கும் வியாபித்து இருப்பவர். எல்லாவற்றையும் கடந்தும் இருப்பவர். இறைவனின் இந்த இயல்பு சொரூப இயல்பு எனப்படும். ஒரு பொருளுக்கு அதன் தன்மையில் இயல்பாக என்றுமுள்ள இயல்பு எனப்பொருள்படும்.

சொரூப இயல்பு என்பது அருவம்,அருவுருவம்,உருவம் என்னும் மூன்று தன்மைகளையும் கடந்த இறைவனின் தன்மையாகும்.அருவம் என்பது உருவத்தின் நுட்பம். கண்ணுக்கு தெரியாத தன்மையை அருவம் என்போம். நுண்ணங்கிகளும் அணுமூலக்கூறுகளும் எமது கண்களுக்கு புலப்படுவதில்லை. எனவே அவற்றுக்கு உருவமில்லை என்று ஆகிவிடுமா? எனவேதான் அருவம் என்பது உருவத்தின் நுட்பம் என்பதை உணர்ந்து, அருவத்தையும் கடந்த நிலையே இறைவனின் சொரூபநிலை என்கின்றது சைவசித்தாந்தம்.

இறைவனின் சொரூப இயல்பை மொழிகளால் பூரணமாக விளங்கிக் கூற முடியாது.சொற்பதம் கடந்த தொல்லோன் என்றும் சொல்பதம் கடந்த அப்பன் என்றும் மாணிக்கவாசகப்பெருமான் இறைவனின் இயல்பை சொற்களுக்குள் அடக்க முடியாது என்று கூறிவிடுகின்றார். இத்தன்மையே சொரூப இயல்பு என்போம்.

ஒருநாமம் ஒருருவம் ஒன்றும்
இல்லாற்கு திருவாசகம்

மூவரும் முப்பத்து மூவரும் மற்று
ஒழிந்த தேவரும் காணாச்
சிவபெருமான் திருவாசகம்

பெண் ஆண் அலி எனும்
பெற்றியன் திருவாசகம்

பெண்டிர் ஆண் அலி என்று
ஒண்கிலை திருவாசகம்

இப்படியன் இந்நிறத்தன்
இவ்வண்ணத்தன்

இவனிறைவன் என்றெழுதிக்
காட்டொ ணாதே ஆறாம்
திருமுறை

சிந்தனைக்கு அரிய சிவமே
போற்றி திருவாசகம்

எவராலும் அறியமுடியாத தன்மையை உடையவர்,ஆண்,பெண்,அலி எனும் பேதங்களைக் கடந்தவர், அருவம்,உருவம்,அருவுருவம் எனும் வடிவங்களைக் கடந்த தன்மையுடையவர், இப்படிப்பட்டவர், இந்த நிறமுடையவர்,இந்த வடிவம் உடை

யவர் என்று எழுத்தாலோ சொற்களாலோ விபரிக்கமுடியாத தன்மையை உடையவர் என்று இறைவனின் சொரூப இயல்பை திருமுறைகள் தெளிவுபடுத்துகின்றன.

சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட தன்மையே இறைவனின் சொரூப இயல்பு என்பதை மாணிக்கவாசகர் 'சிந்தனைக்கரிய சிவமே போற்றி' என்று திருவாசகத்தில் உணர்த்துயுள்ளார்.

சிவன் அருவுருவுமல்லன் சித்தினோடு
அசித்தும் அல்லன்

பவமுதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடுவானும் அல்லன்

தவமுதலி யோகபோகத் தரிப்பவனும்
அல்லன் தானே

இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா
இயல்பினானே சிவஞானசித்தியார்

தனியே சிவபெருமானைப் பற்றிக் கருதினால்; அவர் உருவம்,அருவுருவம்,அருவம் எனும் வடிவங்கள் அற்றவர். அறிவுள்ள பொருட்களாகவும் அறிவற்ற பொருட்களாகவும் உள்ள எந்த உலகப்பொருட்களாகவும் இல்லை. படைப்பு முதலான தொழில்களைத் தானே செய்பவனாகவும் இல்லை. தவம்,யோகம்,போகம் ஆகிய எதனையும் அவர் மேற்கொள்வதில்லை. இவற்றை ஆன்மாக்களுக்கு வழங்குவதன்றி எதையும் அவர் தனக்கு ஏற்பதில்லை. இவை அவரோடு பொருந்தினாலும், இவை எவற்றாலும் அவர் பற்றப்படுவதில்லை என்று சிவஞானசித்தியார் இறைவனின் சொரூப இயல்பைத் தெளிவுபடுத்துகின்றது.



இச்சொரூப இயல்பை சச்சிதானந்தம் என்று சொல்வர். சத்தாகியும் சித்தாகியும் ஆனந்தமாகியும் நிற்கின்ற இயல்பு; சத்து+சித்து+ஆனந்தம்= சச்சிதானந்தம் எனப்படும்.

சத்து = என்றும் யாதொரு மாற்றமும் இன்றி நிலைபேறுடையதாய் உள்ள தன்மை.

சித்து = பேரறிவு

ஆனந்தம் = குறைவில்லா நிறையுடைய பேரின்பம்

சத்து,சித்து,ஆனந்தம் ஆகிய மூன்று தன்மைகளையும் விரித்து சிவபெருமானுக்கு எண் குணங்கள் உண்டென்று சைவசித்தாந்தம் அறிவுறுத்துகின்றது.

அதுவென்ன இறைவனின் எண்குணங்கள்? இறைவனின் தடத்தஇயல்பு என்றால் என்ன? சுருக்கமாகவும் தெளிவாகவும் அடுத்த பகுதியில் பார்ப்போம்.



# அம்பலத்தானும் ஆடற்கலையும்

**சி**வபக்தர்கள் தத்தம் பக்குவநிலை, விருப்பம் முதலியவற்றிற்கேற்ப முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை வழிபடுவர். சிவபெருமானுக்குரிய உருவத் திருமேனிகள் 64 எனக் கூறப்படும். இவற்றுள் இலிங்க வடிவம் அருவுருவத் திருமேனியாகும். ஏனைய 63ம் உருவத் திருமேனிகளாகும். ஒவ்வொரு உருவத் திருமேனியும் கலையம்சங்களைப் பிரதிபலிக்கின்றன. வழிபாட்டிற்குரிய இறைவன் கலை வடிவமாகவே விளங்குகின்றான். இவற்றை சமயகுரவர்கள் போற்றிப் பாடியுள்ளனர்.

நடராஜ மூர்த்தியாக கூத்தப்பிரானாக சிவபெருமான் திகழ்கின்றார். இவருடைய நிருத்த மூர்த்தி பேதங்கள் பலவகையாகக் கூறப்படுகின்றன. இவருடைய 108 தாண்டவங்களும் நாட்டிய நூல்களிலே கரணங்கள் எனக் கூறப்படுகின்றன. தற்காலத்தில் சிவன் ஆடிய ஏழு தாண்டவங்கள் பற்றி சைவ நூல்களும் நாட்டிய நூல்களும் கூறுகின்றன.ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், காளிகா தாடவம், கௌரி தாண்டவம், சங்கார தாண்டவம் என்பனவே ஏழு தாண்டவங்கள் ஆகும். ஏழு தாண்டவங்களும் ஒவ்வொரு தொழிலின் நிமித்தம் ஒவ்வொரு தலத்தில் நிகந்ழ்ததாக திருப்புத்தூர் புராணம் கூறுகின்றது. இவற்றுள் ஆனந்த தாண்டவம் அல்லது நாதாந்த நடனமே தலைசிறந்ததாகக் கருதப்படுகின்றது. இந் நடராஜத் திருவுருவம் மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம், அழகியல் முதலிய பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு ஒப்பற்ற கலைப்படைப்பாக மிளிர்கின்றது. இத் திருவுருவத்தின் தோற்றத்திற்கான முன்னோடி அம்ச ங்களையும், மாதிரி வடிவங்களையும் சிந்து வெளி நாகரிகச் சின்னங்கள், வேத இலக்கியம் இதிஹாசங்கள், புராணங்கள், சிற்பங்கள் முதலியனவற்றிலே காணலாம்.

தமிழ் இலக்கியச் சான்றுகளை நோக்கும் போது கி.பி. 4 ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலப்பதிகாரம் கலித்தொகை ஆகிய நூல்களிலே வரு ம் நடராஜர் பற்றிய குறிப்புகள் கவனிக்கத்தக்கவை. சங்க காலத் தமிழ்ச் சமூகத்திலே முருகன்,கொற்றவை முதலிய தெய்வங்கள் ஆடலுடன் தொடர்புள்ளவர்களாகக் கூறப்படுகிறனர்.

சிவபிரானின் ஆடல்களான கொடுகொட்டி, பாண்டரங்கம் ஆகியன பற்றிச் சிலப்பதிகாரத்தில் குறிப்பாக மாதவியின் ஆடல்களில் குறிப்பிடப்படுகின்றன. கலித்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடிய நல்லந்துவனார் சிவபெருமானைக் குறிப்பாக நடராஜராக வர்ணித்துள்ளார்.

திருமூலர் திருமந்திரத்திலேதான், நடராஜத் திருவுருவத் தின் சிறப்புகளும் தத்துவார்த்த விளக்கங்களும் முதன்முதலாக விரிவாக வருகின்றன. மேலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த காரைக்காலம்மையாரின் திருப்பாடல்களிலும் நடராஜப் பெருமான் பற்றிய முக்கிய குறிப்புக்கள் வருகின்றன. இதுவரை குறிப்பிட்ட சான்றுகளின் அடிப்படையிலே நோக்கும் போது நடராஜரின் திருவுருவம் நமக்குக் கிடைத்துள்ள தலை சிறந்த 'கலைவடிவம்' ஆகும்.

**அம்பலத்தானும் ஆடற்கலையும் என்னும் தலைப்பிலான சாராம்சக் கட்டுரையானது, இதழ் 04 தொடக்கம் விரிவான கட்டுரையாக சிவ ஒளியில் தொடர்ந்து அரங்கேறும்.**




பரதசூடாமணி
**கௌசலா ஆனந்தராஜா**
பிரான்ஸ்

# தென்கயிலை ஆதீன ஞானக்கவி

ஓம் நமசிவாய.

கனடா ரொறின்ரோவில் வசிக்கும் தேசபாரதி தீவகம் இராஜலிங்கம் ஐயா அவர்கள், தென்கயிலை ஆதீனம் முதற்குரு. தவத்திரு. அகத்தியர் அடிகளார் அவர்களால் சிறப்புப் பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளார். தென்கயிலை ஆதீனத்தின் சிவன் மலையில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானையும், தென்கயிலை ஆதீனத்தையும், சிவ ஒளி இதழுக்கும் பல பாடல்களையும் கவிதைகளையும் தீவகம் வே, இராஜலிங்கம் ஐயா அவர்கள் இறைபக்தியோடும் தமிழுணர்வோடும் பாடியுள்ளார்.

இசைக் கலையிலும், கவித்துவத்திலும் வித்தகரான, தவத்திரு, அகத்தியர் அடிகளாருக்கு, கவிஞரின் எழுத்து வரிகளும், கருத்துக்களும்ஃ சமூக சிந்தனைகளும் வெகுவாகக் கவர்ந்து விட்டன. ஆதலால் தென்கயிலை ஆதீனத்தின் கவிஞனாகத் தெரிவு செய்து, தென்கயிலை ஆதீன ஞானக்கவி என்னும் சிறப்பு பட்டத்தை வழங்கி மதிப்பளித்துள்ளார். ஆதீனத்தின் கடிதத் தலைப்பில், தென்கயிலை ஆதீனத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் ஊடாக தன் கைப்பட எழுதி இதைத் தெரிவித்துள்ளார்....

**கடித வரிகள்......**
**திரு.குகன் குணரெத்தினம்**
**தென்கயிலை ஆதீன அனைத்துலக இணைப்பாளர்**
**ஊடாக..**

**சேரல். வே. இராஜலிங்கம்**
**ரோறன்ரோ (கனடா)**

**26.03.2020**
**தென்கயிலை ஆதீன ஞானக்கவி**

ஆண்டு அறுபத்தைந்திலிருந்து (1965) இன்றுவரை,ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாக்கள் இயற்றி, சைவத்தமிழ் உலகின் நற்கவியாய் விளங்குபவர், கனடா ரொறின்ரோவில் வசிக்கும் தீவகம் வே. இராஜலிங்கம் ஐயா அவர்கள்.

இனிய தமிழ் , இளைய தமிழ், பக்தித் தமிழ் கவி படைக்கும் தீவகத் தமிழ் மகனின் சிந்தையில் சமூகநோக்கம் இளையோடுவது பெரும் சிறப்பே. அண்மைக் காலமாய் தென்கயிலை ஆதீனத்திற்காய் கவி தரத் தொடங்கியுள்ளார். அவரது உள்ளமும், உணர்வும், சிறந்த பயபக்தியும் போற்றத்தக்கவை. அவர் பணி தொடரட்டும். கவிப் பெருமகனாருக்கு எமது அன்பையும, வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது செம்மைப் பணிகண்டு தென்கயிலை ஆதீன ஞானக்கவி என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்கிறோம்.

**நன்றி**

**கையொப்பம்,**
**தவத்திரு, அகத்தியர் அடிகளார்.**
**26.03.2020**



உ
சிவமயம்

# தென்கயிலை ஆதீனம்

இல 36, சிவன் மலை பீலியடி, கன்னியா
திருகோணமலை, இலங்கை
Reg No : HA/4/TM/67

குருமுதல்வர் : தவத்திரு அகத்தியர் அடிகளார்
இளையபட்டம் : திருமூலர் தம்பிரான் அடிகளார்

தொ.பேசி: +94 77 509 8157
+94 77 173 1728

திகதி: 26/03/2020

திரு [illegible]
தென்கயிலை ஆதீன அறக்கட்டளை -
- நிறைவேற்றுநர் ஊடாக,
பிரான்ஸ்

தென்கயிலை ஆதீன கௌரவம்

[illegible]

'தென்கயிலை ஆதீன கௌரவம்' - எனும் பட்டத்தை
வழங்கி மகிழ்கிறோம்.

நன்றி.

இறைபணியிலுள்ள
[signature]
26/03/2020

குரு முதல்வர்
தென்கயிலை ஆதீனம்,
இல.36. சிவன்மலை.
பீலியடி, கன்னியா,
திருக்கோணமலை.

நகல்
கவிஞர் வே. இராசலிங்கம்
[illegible], கனடா.

'அன்பேயாகி அமர்ந்திருப்போம்'



# அகத்தியர்

அகத்தியர் பலர் என்பது, அகத்தியர் என்ற பெயர் உடையவர்கள் பலபேர். எல்லாரும் பல காலங்களில் இருந்தவர்கள். அவர்களிற் சிலரை இங்குத் தருகின்றோம்.

1.திரிபுராதிகள் காலத்தில் இருந்த பொதியமலை அகத்தியர் அல்லது குற்றாலமுனி அல்லது குறுமுனி.

2.செங்கோவின் காலத்தில் இருந்த பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர் அகத்தியர்.

3.சூரபன்மன் காலத்தில் இருந்த வாதாபி அகத்தியர்.

4.பரசுராமர் காலத்தில் இருந்த குடகுமலை அகத்தியர் அல்லது குடமுனி.

5.இராமாயண காலத்தில் தசரத இராமருக்கு உதவியாய் இருந்த பஞ்சவடி அகத்தியர்.

6.பாரத காலத்தில் இருந்த உலோபா முத்திரையை மணந்த துவராபதி அகத்தியர்.

7.பவுத்த மதத்தைச் சேர்ந்த அகத்தியர்.

8.சித்தர் குழாஅத்தைச் சேர்ந்த சித்த அகத்தியர்.

9.வைத்திய முறையில் கைதேர்ந்த அகத்தியவேள்.

10.காம்போதி நாட்டு (Cambodia) யசோமதியை மணந்த அகத்தியர்




பொதுமறைச் செம்மல்
மருத்துவ மாமணி
சித்த மருத்துவர
எம்.ஏ.உசைன்
சென்னை


என எத்துணையோ பேர் அகத்தியர் நாமம் படைத்தவர்கள் ஆவார்கள்.

புலவர்கள் எல்லாம் பெயர் ஒற்றுமை ஒன்றையே கருதி, எல்லா அகத்தியர்களையும் ஒன்றுபடுத்தி ஒருவர் வரலாற்றை இன்னொருவர் வரலாற்றில் புகுத்தி

புராணங்களில் எழுதிவிட்டார்கள்.

மேலே கூறிய எல்லா அகத்தியர்களும், காலத்தாலும் இடத்தாலும் உணவாலும் நடையுடை பாவனைகளாலும் பழக்க வழக்கங்களாலும் முற்றிலும் மாறுபட்டவர்கள் ஆவார்கள்.

குடகுமலையில் வாழ்ந்துவந்த அகத்தியரைக் குடகு முனி என்பர். அவரைக் குடமுனி என்றும் சுருக்கம் கருதி அழைப்பர். பிற்காலப் புலவர்கள் வரலாறு தெரியாததால் வார்த்தையைக் கொண்டு குடமுனி குடத்தில் பிறந்தார் என்று கதை கட்டிவிட்டார்கள்.

அது மாதிரியே, பொதியமலைக்குக் குற்றாலம் என்று ஒரு பேர் இருப்பதால் பொதியமலை அகத்தியரைக் குற்றாலமுனி என்பர். சுருக்கமாகக் குறுமுனி என்பதும் உண்டு. குறுமுனி என்றாலும் குற்றாலமுனி என்றாலும் பொதியமலை முனி என்றாலும் ஒன்றே. பிற்காலப் புலவர்கள் வரலாறு தெரியாமையால் குறுமுனி என்றால் குறுகிய முனி என்றும் அவர் பெருவிரல் அளவு உள்ளவர் என்றும் கதை எழுதிவிட்டார்கள்.

மேலும் இராமாயண காலத்தில் பஞ்சவடியில் ஆரிய அரசராகிய தசரதருக்குத் தூதராக (Ambassador) இருந்த பஞ்சவடி அகத்தியரையும், பொதியமலையில் இமயவரம்பன் மகள் பார்வதியை திருமணம் செய்த மேருவரம்பன் என்கிற பரமேச்சுரர் காலத்தில் இருந்த பொதியமலை அகத்தியரையும் ஒன்றுபடுத்திக் கூறுவாரும் உள்ளனர்.





அகத்தியர் என்ற பெயரை உடைய பல அகத்தியர்களைப் பற்றி 'அகத்தியர் விளக்கம்' என்னும் நூலில் விபரமாகக் காணலாம். அதில் கண்டு விளங்கிக் கொள்க. ஆதலின் அகத்தியர் என்னும் பெயர் உடையவர் பலர் என்பதும் திருமூலர் தம் நூலில் கூறிய அகத்தியர் பொதியமலை அகத்தியர் என்பதும்; அப் பொதியமலை அகத்தியரைப் பார்க்க வேண்டியே கயிலையினின்றும் அவர் இரண்டாம் தடவை தென்னாடு போந்தார் என்பதும் அறிந்து கொள்ளக் கூடியதே.

## திருவள்ளுவர் சிறப்பு

கி.மு 75 முதல் 36 கி.பி வரை, அதாவது 111 ஆண்டுகள் வாழ்ந்தவர் திருவள்ளுவர். அவர் திருமூலரின் கருத்துக்களையும், சொற்களையும், தொடர்களையும் பொன்னே போல் போற்றியுள்ளார் என்பது. பாண்டிய நாட்டில் கி.மு 50 முதல் கி.பி 30 வரை அதாவது 80 ஆண்டுகள் வரை அரசாண்ட கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி காலத்தில் படைத்தலைவராய் இருந்து 'வள்ளுவர்' என்னும் பட்டம் பெற்று, வழுதியின் வேண்டுகோட்கிணங்கித் திருக்குறள் என்னும் நீதிநூலைப் பாடியவர் 'வாளார் நெடுமாறன் வள்ளுவனார்' ஆவார்.

''தப்பா முதற்பாவால் தாமாண்ட
பாடலினால் முப்பாலின் நாற்பால்
மொழிந்தவர் எப்பாலும் வைவைத்த
கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள்ளுவர்''



என்ற கீரந்தையார் பாடலினால் வழுதியின் கட்டளைப்படி வழுதி மனமகிழத் தெய்வத் திருவள்ளுவர் திருக்குறளைப் பாடினார் என்பது பெற்றறிந்த உண்மையாம்.

''அறனறிந்தேம் ஆன்ற பொருள்தெரிந்தேம்
இன்பின் திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்
மறன்எறிந்த வாளார் நெடுமாறன்
வள்ளுவனார் தம்வாயால் கேளா
தனவெல்லாங் கேட்டு''

என்ற கொடிஞாழல் மாணிபூதனார் பாட்டால் திருவள்ளுவருடைய இயற்பெயர் 'நெடுமாறன் வள்ளுவர்' என்பது அறியப்படுகிறது.

திருவள்ளுவர் தம் இளவயதில் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலையும், 'தமிழ் மூவாயிரம்' என்னும் தத்துவ நூலையும் நன்கு கற்றவர். அரசியல் ஞானமும் உலக அறிவும் மிகுதியும் உடையவர். வாட்படையைத் தாங்கி சண்டை செய்வதில் இணையற்றவர். இவர் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியுடனும் தனித்தும் பல தடவைகளில் பகைவர்களுடன் மலைந்து வெற்றிபெற்றவர். அதனானன்றே 'மறன் எறிந்த வாளார் நெடுமாறன் வள்ளுவனார்' என்று கொடிஞாழல் மாணிபூதனார் கூறலாயினார்.

திருவள்ளுவர் கி.மு 75 முதல் கி.பி 36 வரை வாழ்ந்தவர். ஆனபடியால், இவர் பிறப்பதற்கு 25 ஆண்டுகள் முன்னர் அஃதாவது கி.மு 100ல் திருமூலர் 'தமிழ் மூவாயிரம்' என்னும் நூலை இயற்றி, தம்முடைய ஏழு சீடர்களுக்கும் உபதேசித்துவிட்டுப் பரமுத்தி யடைந்ததை அறிந்தவர் திருவள்ளுவர் ஆனபடியால், தமிழ் மூவாயிரத்தை நன்கு கற்றார். தமிழ் மூவாயிரத்தினின்றும் திருவள்ளுவர் எடுத்தாண்ட பகுதிகளில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுகின்றேம்.

1.ஆரும் அறியார் அகாரம் அவனென்று தமிழ் மூவாயிரம்.

அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் திருக்குறள்

2. அறிவுடையார் நெஞ்சொடு ஆதிபகவனும்தமிழ் மூவாயிரம்

ஆதிபகவன் முதற்றேயுலகு திருக்குறள்

3. போதுகந் தேறும் புரிசடை யானடி தமிழ் மூவாயிரம்

மலர்மிசை ஏகினான் திருக்குறள்

4. பொருளதுவாய்நின்ற புண்ணியன் தமிழ் மூவாயிரம்

இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் திருக்குறள்

5. எண் சத்தி தூய்மையும் தமிழ் மூவாயிரம்

எண் குணத்தான் திருக்குறள்

6. தன்னை யொப்பார் ஒன்றுமில்லாத் தலைமகன் தமிழ் மூவாயிரம்

தனக்கு உவமை யில்லாதான் திருக்குறள்

7. அறவாழி அந்தணன் ஆதி பராபரன் தமிழ் மூவாயிரம்

அறவாழி அந்தணன் தாள் திருக்குறள்

8. விளைக்கும் தவம் அறம் மேல் துணை யாமே தமிழ் மூவாயிரம்

தானம் தவம் இரண்டும் திருக்குறள்

9. முழக்கி எழுவன மும்மத வேழம் அடக்க அறிவெனும் தோட்டியை வைத்தேன் தமிழ் மூவாயிரம்

உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காத்தல் திருக்குறள்

10.ஆமே சுவை ஒளி யூரோசை நாற்றம் தமிழ் மூவாயிரம்

சுவை ஒளி யூரோசை நாற்றமென் றைந்தின் திருக்குறள்

11. .அந்தண்மை பூண்ட அறவோர் ஆகமத்துச் சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி தமிழ் மூவாயிரம்

அந்தணர் என்போர் அறவோர் திருக்குறள்.

இன்னும் எத்தனையோ உள. விரிக்கக் கூறின் நேரம் எடுக்கும் என்பதால் இத்துடன் அமைகின்றேம். இதனால் தமிழ் மூவாயிரம் திருவள்ளுவர் காலத்துக்கு முற்பட்டது என்றும், திருவள்ளுவர், பட்டினத்தார், தாயுமானவர் போன்ற பெரியார்கள் எல்லாம் படித்துச் சுவைத்து இன்புற்றது என்றும் அறியலாம்.

# மூர்த்தி- தலம்- தீர்த்தம் அமையப் பெற்ற திருக்கேதீச்சரம்



திருக்கேதிச்சரம் 6ம் 7ம் நூற்றாண்டில் சந்தரமூர்த்தி நாயனார் , திருஞானசம்மந்தர் நாயனார் ஆகியோரால், திருப்பதிகம் பாடப்பெற்ற திருத்தலமாகும். பின்னர் இராஜ இராஜசோழன் , பல்லவ  மன்னர்களாலும் புனரமைப்பு செய்யப்பட்ட கருங்கற் திருக்கோயிலாகும். தமிழ் மாமன்னர் சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்றவர்கள் வழிபட்டு முறைப்படி பூசை செய்து புனைந்தேத்தியுள்ளனர் என்பதம் வரலாறு.



மகாலிங்கம் நடேசானந்தன்
திரக்கேதீச்சரம் ஆலயம்

**திருச்சிற்றம்பலம்**

**கௌ**ரி அம்பாள் சமேத திருக் கேதீச்சர நாதர் திருப் பொற்பாதம் பணிந்து இவ்வாலயத்தின் சிறப்புப் பற்றி உலகெங்கும் வாழும் சைவ மெய்யடியார்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.இத திருக்கேதீச்சரத் திருத்தலமானது, சிவபூமி இலங்கை வடபால் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மாதோட்டப் பகுதியில் பாலாவி புண்ணிய தீர்த்தத் தை,தன்னகத் மீது கொண்டு அமை யப்பெற்றுள்ளது.

கேது தன் தோசம் நீங்குவத்றகாக பாலாவியில் நீராடி, இறைவனை வழிபட்டு தோசம் நீங்கப்பெற்ற தால் கேது ஈச்சரம் கேதீச்சரம் எனப் பெயர் பெற்றது. தொடர்;ந்து இலங் கையின் ஆதிக் குடிகளான நாகர் கள், இயக்கர்கள் வழிபட்டமையி னால் நாகநாதர் எனவும் இறைவன் அழைக்கப்பட்டார். இலங்கை வேந்த னான இராவணன், அவர் தம் துணை



சிவபூமி மன்னார் திருக்கேதீச்சர
ஆலய புனரமைப்புப் படங்கள்.

வியான மண்டோதரி பிரியமுடன் வழிபட்ட திருவிடம் திருக்கேதீச்சரமாகும். முயன், மாதுவட்டா ஆகியோர் வணங்கிப் போற்றிய பேராயமும் இத்திருத் தலமே.

மேலும் 6ம் 7ம் நூற்றாண்டில் சந்தரமூர்த்தி நாயனார் , திருஞானசம்மந்தர் நாயனார் ஆகியோரால், திருப்ப திகம் பாடப்பெற்ற திருத்தலமாகும். பின்னர் இராஜ இராஜசோழன் , பல்லவ மன்னர்களாலும் புனரமைப்பு செய்யப்பட்ட கருங்கற் திருக்கோயிலாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கடற்பிராந்தியம் வழி யாக வாணிபம் செய்கின்ற பல நாடுகளைச் சார்ந்த வர்களும், தங்களது கடற்பயணத்தால் இடர்கள் வாரா வண்ணம் திருக்கேதீச்சரம் வந்து வழிபட்டு சென்றதாக வரலாற்று நூல்களிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

புணீன்னர் காலத்திற்கு காலம் அந்நியரின், படையெ டுப்பின் காரணமாக முரத்தி, தலம், தீர்த்தம் முறையா கக் கொண்டு அமையப்பெற்ற இவ்வாலயம் இடித்துச் சிதைக்கப்பட்டது. அதனைத் தொடந்து 300 வருடங் கள் காடாய்க்கிடந்த ஆலய அமைவிடத்தை ஆறுமுக நாவலர் பெருமானால் கண்டுணரப்பட்டது. பின்னர் திர்ப்பணி வேலைகள் ஆரம்பமாகி 1953 ம் ஆண்டு கும் பாபிசேகம் இடம் பெற்றது.

இத் திருக்கேதீச்சர ஆலயமானது, நாட்டடில் ஏற் பட்ட அசாதாரண சூழ்நிலையால் மீண்டும் சேதமற்ற நிலையில், 2015ம் ஆண்டு கருங்கல்லினால் திருப்பணி நடைபெற திருவருள் கூடியது. புதுப் பொலிவு பெற்று பழைய நிலைக்கு திரும்பும் நிலையில் , இந்திய மத்திய அரசின் உதவியுடனும், அடியவர்களின் பேராதரவு டனும், முழுவதுமான கருங்கற் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று இவ்வாண்டு கும்பாபிசேகம் காணக் கிடைப்பது பெரும் பாக்கியமே

இங்கே வழிபட்ட கேது தோசம் நீங்கப் பெற்றது. அதி உன்னத சிவபக்தனான இராவணனை வதம் செய்த இராமனுக்கு ஏற்பட்ட பிரம்மகத்தி தோசம் நீங்க இங்கு வந்து வழிபட்டு, சிவபெருமானால் தோசம் நீங்கிய தாக இராமகாவியம் என்னும் நூலில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இத்தலத்தில் சிவராத்திரி விரதநாளில் மெய்யன்போடு வழிபடும் அடியவர்க்கு, வேண்டுவனவற்றை அனைத் தையும்,கேதீச்சரப் பெருமான் வழங்குவதாக ஐதீகம்.

மகா சிவராத்திரி தினமானது இத்திருக்கேதீச்சர திருத் தலத்தில்,சிறப்பான ஒரு விரதநாளாக அனுஷ்டிக்கப்ப டுவது வழக்கம்.அத்தரணத்தில் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் இருந்து வரும் அடியவர்கள், சிரத்தையான பக்தியுடன், பாலாவி புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, தீர்த்தம் எடுத்து வந்து தங்களின் கரங்களினாலேயே மகாலிங்கப் பெருமானுக்கு அபிசேகம் செய்து, தங் களது வேண்டுதலை நிறைவேற்றுவதும், நான்கு சாமப்

சிவபூமி மன்னார்
திருக்கேதீச்சர ஆலய
புனரமைப்புப் படங்கள்.





சிவபூமி மன்னார் திருக்கேதீச்சர ஆலய புனரமைப்புப் படங்கள்.

பூசைகளில் கலந்து கொள்வதும் அதி உன்னதமான சிறப்பு நிகழ்வாகும்.

இத் திருத்ததலமானது, திருக்கேதாரத்திற்கு ஒப்பானதாகக் கருதப்படுகின்றது. காரணம் திருக்கேதாரத்தில் எழுந்தருளியுள்ள அம்பாளுக்கும், திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கும் அம்பாளுக்கும் கௌரியம்மை என்ற திருநாமமேயாகும்.

கேது தோசம் உள்டளவர்கள் இங்கு வந்து, பாலாவி புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, சிவனை வில்வம் இலையால் அர்ச்சனை செய்வதால், கேதுவின் தோசம் நீங்கப் பெற்று வருவது சிறப்பு. தரிசிக்க உகந்த சிவத்தலங்களில் ஒன்றான இக் கேதீச்சரநாதன் தாள் பணிந்து அருள் பெற்று வாழ்வது சிறப்பு.

எந்தை பிரான் என் மனத்துள் இருக்க... வளங்கள் யாவும் கூடும். ஆல்லவை ஆகா - பிறவித் துயரகன்று திருவடிக்கே இலக்காம் பெரும் பேறன்றி வேறேதுமில்லை.

**திருச்சிற்றம்பலம்.**
**ஓம் நமசிவாய.**





# போதைப் பொருள்

**இன்றைய இளம் சந்ததியினரும் மது மற்றும் போதைப் பொருள் பாவனை.**



திருமதி.
**பவானி சற்குணசெல்வம்**
(கொலண்ட்)

உலகம் முழுவதும் சுமார் 200 மில்லியன் பேர் போதைப்பொருள் பாவிப்பவர்களாக உள்ளார்கள் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாவிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சனைதான் இந்த போதைப் பொருட்கள். போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன.

தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும், குழப்பத்தையும் தன்னைத்தானே மனிதன் ஏற்படுத்திக் கொள்கின்றான். போதைப் பொருட்களில் மது, ஹெராயின், பெத்தனால் ஊசி, கஞ்சா, புகையிலை, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் இன்னும் பல வகைகள் அடங்கும். உலக சனத்தொகையில் சுமார் நூறு கோடி பேர் புகைப்பழக்கத்திற்கு பழக்கபட்டுள்ளனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 30 விகித மக்களும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 50 விகித மக்களும் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர். தினமும் சுமார் 250 மில்லியன் பெண்கள் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர். (அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 22விகிதம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 0.9 விகிதம்).

இலங்கையில் 1315 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களில் 11 விகிதத்தினர் புகைத்தல் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக உலக சுகாதார திணைக்களம் தெரிவிக்கின்றது.

பள்ளிப் பருவத்திலோ அல்லது கல்லூரிகளிலோ படிக்கும் போது தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக்கங்களினாலும் மற்றும் பொழுதுபோக்காகவும் பழகிக் கொண்ட பழக்கத்தை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப் பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். பலமுறை இத் தீய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள். ஒன்றைத் தவிர்க்க மற்றொன்றை பயன்படுத்தி அதையும் சேர்த்து அடிமையாகிக் கொண்டவர்களும் இருக்கின்றனர். கடின வேலை செய்பவர்கள் தங்கள் உடல் வலி மறந்து இருக்கவும் போதையைப் பயன்படுத்துகிறோம் என்று கூறுகிறார்கள். நிச்சயம்

ஒரு நாள் மரணம் உண்டு, இதை விட்டு ஒழித்தால் மட்டும் மரணமின்றி வாழ்ந்துவிடலாமா? என தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டு தொடர்பவர்களும் இருக்கிறார்கள்.

இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழி காட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடுகின்றது.

எல்லோருக்கும் எளிமையாகவும், பரவலாகவும் கிடைத்து விடும் போதைப்பொருள்தான் சாராயம் மற்றும் அதைச் சார்ந்த மது வகைகள். இந்தப் பழக்கம் தற்போது பள்ளிப் பருவத்திலேயே பலரும் பழகிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இதற்குக் காரணம் ஆங்காங்கே அமைந்திருக்கும் மதுக்கடைகளும், இதற்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரமும், திரைப்படங்கள் இத்தகைய பழக்கம்; இளைஞர்கள் செய்வது தவறில்லை என்று சித்தரிப்பதும், மகிழ்ச்சி மற்றும் துக்க வேளைகளில் மது தேவை என்ற மனோநிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

மது பரிமாறல்கள் மேலை நாட்டுக் கலாச்சாரம் என உயர்வாகக் கருதுவதும் இப்பழக்கத்திற்கு ஒரு காரணமாகும். பிரச்சனைகள் மற்றும் குறைகளை போதைப்பழக்கத்தால் மறந்து நிம்மதியாக இருக்கலாம் என்று தவறாகக் கருதுவதும் இது போன்ற தீய பழக்கங்களுக்கு மக்களை ஆட்படுத்திவிடுகின்றது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தால் அவரைத் திருத்த முயற்சிக்காமல் அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக தாங்களும் கற்றுக் கொள்கின்ற பலரும் இருக்கிறார்கள்.

இளம் வயதில் பழகிக் கொள்ளும் இத்தகைய போதைப் பழக்கங்கள் மெல்ல மெல்ல இவர்களை அடிமையாக்கி விடுகிறது. போதைப் பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது மனிதனின் நரம்பு மண்டலம். மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செய்கின்றது. இதன் காரணமாக சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்படுட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களினால் இதை உட்கொண்டவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல் சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு உள்ளாகின்றார்கள். போதைப் பொருட்களினால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புகள், சமுதாயம் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்புகள் என பலவகையான தீமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

உலக நாடுகள் எல்லாம் போதைப் பொருட்கள் கடத்தலுக்கு எதிராக கடுமையான சட்டத்தை உருவாக்கிக் கட்டுப்படுத்தி வருகின்றன. இருப்பினும் ஹெராயின், கஞ்சா போன்ற பொருட்களை விற்பதும் பிற நாடுகளுக்கு கடத்துவதும் இன்றுவரையிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பாடசாலை வாசல்களிலேயே கஞ்சா சாக்லேட்கள் விற்கப்படுவதும், விற்பவர்கள் கைது செய்யப்படுவதும் பத்திரிக்கைகளில் படிக்க நேரிடுகின்றது. சுற்றுலாத்தலங்களுக்க அருகாமையில் சிதறிக்கிடக்கும் மதுக்



குப்பிகளும், ஊசிகளும் பலரும் போதைக்கு அடிமையாகிக் கொண்டிருப்பதற்குச் சான்று பகர்கின்றது.

### அதிகரித்த போதைவஸ்து பாவனையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

வீட்டுச் சூழலிலிருந்து பல பிள்ளைகள் போதை பாவனைக்கு ஆளாகுகின்றார்கள். தந்தை சிகரட் புகைப்பவராக இருந்தால், அந்த சிகரட்டை வாங்குவதற்கு பிள்ளையிடம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறார். அந்தப் பிள்ளை தந்தையுடைய பழக்கத்தைப் பார்த்து நாளடைவில் அதனை திருட்டுத் தனமாக புகைக்க ஆரம்பிக்கின்றது.

வீட்டில் வைபவங்களின் போது பியர் மற்றும் மது பாவிக்கப்படும்போது பிள்ளைகள் அவற்றின் ஆபத்துக்களை பொருட்படுத்தாமல் பயன்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

வீட்டுச் சூழலில் பயன்படுத்திய போதைபொருட்களை பிள்ளைகள் நாளடைவில் சமூக சூழலில் சக தோழர்களுடன் தொடர்ந்தும் பழகிக் கொள்ள முனைகின்றனர். சிலவேளை வீட்டுச் சூழலில் சிகரட் புகைத்தல், மது அருந்துதல் போன்றவை இல்லாவிட்டாலும் சமூக சூழலில் அவை பயன்பாட்டில் இருக்குமாயின் அவர்கள் இலகுவில் போதைக்கு ஆளாகிவிடுவார்கள்.

குடும்பத்தில் எல்லா பிள்ளைகளிடமும் பெற்றோர் சரி சமமான அன்பு பாசம் காட்டி அரவணைக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மை வளர விடாமல் காத்துக் கொள்ள வேண்டும். பெற்றோரிடம் உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்படும் மன முறிவை போக்க போதையை பயன்படுத்தி தீர்வு காண முனைகின்றனர்.

### பொது வாழ்வில் ஏற்படும் போட்டி சூழலுக்கு முகம் கொடுக்க முடியாமை

சவால்களை சந்திக்க முடியாமல் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகும்போது போதையை நாடுகின்றனர். பரீட்சையில் தோல்வி, போட்டி நிகழ்ச்சிகளில் தோல்வி, படிக்க முடியாத பிரச்சினை எனும்போது அவற்றுக்கு தீர்வாக போதையினை பயன்படுத்துகின்றனர்.

மேலே கூறப்பட்ட காரணிகளுக்கு உடந்தையாக ஊடகங்கள் செயற்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எந்தவொரு பிரச்சினையின் போதும் அதற்கு முகம் கொடுக்க



முடியாதபோது போதையை பயன்படுத்துவதையே ஊட கங்கள் முக்கியமான செய்தியாக காட்சிப்படுத்துகின்றது.

காதல் தோல்வி, குடும்பத் தகராறு, வாழ்வில் தோல்வி, வேலையின்மை, விரக்தி, நண்பர்களுக்கிடையிலான உற வில் விரிசல் போன்ற காட்சிகளில் கதாநாயகன் நாடக் கூடிய முதல் தீர்வு சிகரட் புகைப்பது, மது அருந்துவது என் பதைத்தான் இந்த சினிமா மற்றும் நாடகங்களில் காட்டப்ப டுகின்றது.

உலக மருத்துவ அறிக்கையின் புள்ளிவிவரப்படி உலகில் 2 கோடி பேர் ஹெராயின் போதைப் பழக்கத்திற்கு அடிமை யானவர்கள் ஆவார்கள். அதிர்ச்சித் தகவல் என்னவென் றால் தற்போது மேற்கத்திய நாடுகளில் போதைப் பழக்கத் திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சதவிகிதத்தின் அடிப்படையில் குறையத் தொடங்கியுள்ளது. ஆனால் ஆசிய நாடுகளில் போதைப்பொருள் அடிமைகள் அதிகமா கிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் மேலை நாடுக ளில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுகள் நம் நாடுகளில் இல்லா மல் போனதுமாகும்.

போதைப்பொருள் பாவனையாளர்களின் தொல்லை களால் பாதிக்கப்பட்ட சிலரிடம் கருத்துக்கேட்ட போது போதை பொருளை பாவிப்பவர்களினால் எங்களுடைய பிள்ளைகளும் இந்த பழக்கத்திற்கு உள்ளாகுபவர்களாக மாற வாய்ப்பு இருக்கின்றது.

போதைக்கு எதிராக பல தன்னார்வ தொண்டு நிறுவனங் கள் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளன.. நம் உடல் ஆரோக்கியத்திற்கு நாமே தீங்கிழைத்துக் கொள் வது பாவமான செயலாகும். நாம் செய்ய வேண்டியது இது போன்ற போதைப் பழக்கங்களிலிருந்து விலகி இருப்பது மற்றும் இது குறித்த விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் ஆகும்.

போதை என்பது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக் கம் என எண்ணிவிட இயலாது. இதனால் அவரைச் சுற்றி யுள்ள சமுதாயமும் பாதிப்படைகின்றது. படிக்கும் வயதில் போதையைப் பயன்படுத்தினால் தம்முடைய படிப்பும் கெட்டு, தன்னோடு பழகும் சக நண்பர்களின் படிப்பையும் பாழ்படுத்திவிடுவது. பணிபுரிபவர்கள் போதைக்கு அடி மையானால் அலுவலக வேலையை இழந்து, தம்முடைய பொருளாதாரத்தை இழந்து குடும்பத்தை வறுமையில் கொண்டு சென்றுவிடுதல், குடும்ப மகிழ்ச்சி மற்றும் சமூக அந்தஸ்தை இழத்தல்

வாகனம் ஓட்டுபவர்கள் போதையைப் பயன்படுத்துவ தால் கவனம் சிதைந்து விபத்துக்களுக்கு உள்ளாகி உயிர் இழப்புகளை ஏற்படுத்துவது. சிறிது சிறிதாக போதைப்ப ழக்கமானது அதிகரித்து அந்த அற்ப இன்பத்தைப் பெற்றுக் கொள்ள திருடுதல், பொய் பேசுதல் மற்றும் மானக்கேடான விஷயமாக இருந்தாலும் அதைச் செய்யத் துணிந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது. போதையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள் அஞ்சாமல் பாலியல் குற்றங்களிலும் ஈடு பட்டு அதன் மூலம் பல நோய்களை ஏற்படுத்திக் கொள்கி றார்கள்.

''போதைக்கு அடிமை'' என்பதை கீழ்கண்ட விடயங்க ளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆரம்பத்தில் பயன்படுத்திய அளவைவிட சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டே செல்லுதல். மற்றும் அடிக்கடி போதை வேண்டுமென்று தோன்றுதல்.

எதை இழந்தாலும் தனக்கு போதை தரக் கூடிய பொருளை அந்தந்த நேரத்தில் தனக்குக் கிடைக்கும் விதமாக பார்த்துக் கொள்ளுதல். அல்லது அதை முன்னரே வாங்கி வைத்துக் கொள்ளுதல்.

இப்பழக்கத்தை இன்றோடு விட்டுவிட வேண்டும் என்று சபதம் ஏற்றும் பல முறை தோல்வியடைவது.

தனக்கு போதை தரக்கூடிய பொருளை அடைய கேவல மான செயல்களைக் கூட செய்யத் துணிவது.

நன்றாக படிக்கக்கூடிய பதினைந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளின் மதிப்பெண்கள் திடீரென குறையத் தொடங் குகின்றது எனில் அவர்களின் நண்பர்கள் வட்டாரத்தைக் கவனியுங்கள்.

உடல் நிலையில் ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்ப தைக் கவனிக்க வேண்டும்.

செயல்பாடுகளிலோ அல்லது உரையாடல்களிலோ ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதை கவனியுங்கள்.

அவர்களுடைய தனிமை அறையில் யாரும் நுழைவதைத் தடுக்கிறார்களா?

அடிக்கடி பணம் கேட்கிறார்களா? உண்மையான தேவை தானா என்பதை கண்டறியுங்கள்.

போதைக்கு அடிமையானவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்க எத்தனையோ மறுவாழ்வு மையங்கள், அலோபதி, ஆயுர்வேதா, சித்தா என எத்தனையோ மருத்துவ முறை களும் இருக்கின்றன. எனினும் தானாகவே உணர்ந்து யார் கைவிடுகின்றாரோ அவர்களால் மட்டும் தான் இத்தகைய பழக்கங்களிலிருந்து மீள்வது சாத்திமாகும்.

1987 ஆம் ஆண்டு ஐ.நா.பொதுச் சபையில் எடுக்கப்பட்ட



தீர்மானத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஜூன் 26 ஆம் திகதி போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இவைகள் பற்றி விளக்கம் வழங்கத்தக்க வகையில் 1988 இல் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருளுக்கெதிரான உலக மகாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் புகைத்தல், போதைப்பொருட் பாவனையின் காரணமாக நாளொன்றிற்கு 100 பேர் மரணிப்பதாக இலங்கை மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் 2015 ஆம் ஆண்டு அறிக்கை விடுத்துள்ளது. (புகைத்தலினால் 60 பேர் மதுவினால் 40 பேர்) அறிக்கையின் பிரகாரம் புகைத்தலில் புதிதாக ஈடுபடுவதற்காக ஒரு நாளில் 80 சிறுவர்கள் முயற்சிப்பதாகவும் அறியமுடிகிறது. இந்தியாவில் சுமார் 11 கோடி மக்கள் போதைப் பொருள் பாவனையில் சிக்கிதவிப்பதாகவும் அறியப்பட்டுள்ளது!

இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகள் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையில் போதை பொருட்கள் 1980களில் பரவ ஆரம்பித்தது. இலங்கையில் ஹெரோயின் விற்பனையாளர் முதன் முதலில் 1981 மே 26 இல் 70 கிராம் ஹெரோயினுடன் பேருவளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் 2015ஆம் ஆண்டை போதைப்பொருள்கள் அற்ற ஆண்டாக மாற்றியமைக்க வேண்டும் என்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு போதைக்கு முற்றுப்புள்ளி திட்டம் மட்டுமே போதுமானதல்ல, சகலரும் பூரண ஒத்துழைப்பின் மூலமே போதைப் பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் .போதைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பது, புதிதாக அப்பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சந்ததியினரைப் பாதுகாப்பது என்ற இலக்கிலேயே அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதே நேரம் இன்று இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்தவரை இந்நடவடிக்கைக்கு அவை போதியதாக இல்லை. உதாரணமாக ஒரு ஏக்கர் கஞ்சாவைப் பயிரிட்டாலும் 10 ஏக்கர் கஞ்சாவைப் பயிரிட்டாலும் அதற்கான தண்டனை ஒரே விதமாகவே தற்போதுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் ஹெரோயின் ஒரு கிலோ மூன்று மில்லியன் ரூபா பெறுமதியானது. ஹெரோயினைப் பொறுத்தவரை 2 கிராமை சுமார் 500 பேர் பாவித்து போதை ஏற்றிக்கொள்ள முடியும். வெளிநாடுகளில் வருடாந்தம் இலட்சக் கணக்கானோர் இதனால் பாதிக்கப்பட்டு தண்டனைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இது இவ்வாறிருக்கையில் இன்று வர்த்தக ரீதியில் போதைப்பொருட்கள் சந்தைப் படுத்தப்படுகின்றன. அநேகமாக சட்ட விரோதமான கடத்தல் போன்ற வழிகளிலேயே இவ் வர்த்தகம் நடைபெறுகின்றது. மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாலும் இதற்கு உடந்தையாக வருமானத்தை பெற்று கொள்ளும் நோக்கில் சில பெரும்புள்ளிகள் இருப்பதினாலும் இதனை இல்லாதொழிப்பது ஒரு கடினமான செயற்பாடாகவே மாறி வருகின்றது. போதைபொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகளும் பாதிப்புகளும் அழிவுகளும் குறித்து மக்களிடையே வழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜூன் 26 ஆம் திகதி சர்வதேச போதைபொருள் ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் சமுகத்தின் மத்தியில் ஏட்டுச் சுரைக்காயாகவே இதுபற்றிய விடயம் காணப்படுகின்றது.

போதை ஒழிப்பை மேற்கொள்ள ஒவ்வொருபவரும் ஒத்துழைக்க வேண்டும். மேலும் போதை பொருள் ஒழிப்புக்கு பல சட்டங்கள் மட்டும் இருந்தால் போதுமானது அல்ல சகலரின் ஒத்துழைப்பும் அவசியம். இதன் மூலமே போதை பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். போதைக்கு அடிபணிபவர்களை அதிலிருந்து மீட்பதற்கும் இளச் சந்ததினரை அதிலிருந்து பாதுகாப்தற்கும் அரசு பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்ற போதிலும் பல சமூக நாச சக்திகளா சமூகத்தின் மத்தியில் பல சீர்கேடுகள் இன்னமும் நிகழ்கின்றன.

போதைபொருள் பாவனை, கடத்தல், விற்பனை செய்தல் போன்ற போதைபொருள் பாவனையாளர்களால் ஏற்பட்டுள்ள சமூக பிரச்சினை என்பன இன்று நாட்டில் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. போதைபொருளை கட்டுப்படுத்த ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. போதைபொருள் கடத்தலுக்காக சில நாடுகள் மரதண்டனையை கூட சட்டமாக பிரயோகித்து வருகின்றன.

இவ்வாறான நடவடிக்கை மேற்கொண்டு வந்துள்ள போதும் போதைப்பொருள் பாவனையானது சமுகத்தின் மத்தியில் குறைந்து விடவில்லை. போதைப்பொருள் பாவ




னையால் ஏற்படுகின்ற பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் இலங்கையை பொறுத்த வரையில் குறைவாகவே காணப்படுகின்றது. போதை பொருளை பாவிப்பதனால் பாவிப்பவர்கள் பல்வேறு கஸ்டங்களுக்கு உள்ளாவதோடு பிறருக்கும் தீங்கு விளைவிப்பவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

போதைப்பொருளானது பயன்படுத்துபவரை மட்டுமின்றி, குடும்பம் மற்றும் சமுதாயத்தையும் இது பாதிக்கிறது. இது தான் அனைத்து நோய்களுக்கும் முன்னோடியாக இருக்கின்றது. சிலர் இதற்கு அடிமையாக மாறிவிடுகின்றனர்.

எதிர்கால சந்ததியை சீரழிக்கும் சக்தி வாய்ந்த அரக்கன்களாக போதை மருந்துகள் உள்ளன. கஞ்சா, அபின், புகையிலை, மது, கொகைன், பிரவுன் சுகர், ஹெரோயின், , ஊக்க மருந்து, ஒயிட்னர் முதலிய போதை வஸ்த்துப்பாவனை இளைஞர்களிடம் வேகமாக பரவும் பழக்கங்களாக மாறி வருகின்றன. உடலை மட்டுமின்றி, மனதையும் சிதைத்து, குடும்பத்தையும் அழித்து, முடிவில் மரணத்துக்கே அழைத்து செல்லும் சமுதாய அரக்கன்களாக இந்தப் போதைப் பொருட்கள் மாறியுள்ளன.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள், ஏழைகள், பணக்காரர்கள், விளையாட்டு வீரர்கள், இரசிகர்கள் என்று அனைவராலுமே போதைப் பொருள் பாவிக்கப்படுகின்றது. அவரவர் வசதிக்கும் தரத்திற்கும் ஏற்றவாறு மாறுகின்றதே தவிர குறைந்தபாடில்லை.

ஒரு தேசத்தை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனி நபரை திட்டமிட்டு நசுக்கிவிட ஏவப்படுகின்ற ஓர் ஆயுதம் என்கின்ற குற்றச்சாட்டுகளும் நிலவுகின்றன. தினமும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறன. நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தியும் கடத்தல் நடக்கிறது.

ஆகவே, போதைக்கு அடிமையானவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி, மறுவாழ்வு அளிக்க வேண்டும். விற்பனையை தடை செய்தால் மட்டுமே இதனைத் தடுக்க முடியும்.

ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் நற்சிந்தனைகளை ஏற்படுத்துவற்காக உண்மையான ஆத்மீக சிந்தனைகளை மனித மனங்களில் பதிய வைத்து சீர் திருத்தங்களைச் செய்வதே ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாக அமையும்.

# தென்கயிலை ஆதீனம்

## சிவன் மலை



# அன்பே சிவம்

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

-திருமந்திரம்-

**- திருமூலர் நாயனார் -**